925

உ

ஸ்ரீமத் தெண்டபாணி துணை.

K. A. சின்னசாமி கண்டரால்

இயற்றிய

ஸ்ரீ சிவசுப்ரமண்யர்

சங்கீத அலங்காரக் கீர்த்தனை.

முதற்பாகம்.

2? MAY 1924

ஈரோடு:
சிவராம விலாஸ் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர். [அணா 6.

924.

Q26:417
N24.
182369

உ

ஸ்ரீமத் தெண்டபாணி துணை.

தற்கால நாகரீக நவீன பலவித வர்ன மெட்டுகளடங்கிய

ஸ்ரீ சிவசுப்ரமண்யர்

பக்திரச அலங்காரக்கீர்த்தனை

முதற்பாகம்.

இஃது

பிர்மஸ்ரீ N. சங்கீத கிருஷ்ண பாகவதர் மாணவரி லொருவராகிய சேலம் ஜில்லா குஞ்சாண்டியூர் மகா-ள-ள-ஸ்ரீ ஐயம்பெருமாள்க்கண்டர் குமாரர் சங்கீத சிரோன்மணி

K. A. சின்னசாமி கண்டரால்

இயற்றப்பட்டு,

மகா-ள-ள-ஸ்ரீ அப்பாசாமி பிள்ளை குமாரர் தமிழ்ப்பண்டிதர்

T. A. வரதநஞ்சைய பிள்ளை

அவர்களால் பரிசோதிக்கப்பெற்று

கருங்கல்பாளையம் மகா-ள-ள-ஸ்ரீ

K. P. சுப்ரமண்ய கண்டர்

அவர்களால்

ஈரோடு சிவராம விலாஸ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1924.

இதன் விலை] [அணா 6.

27 MAY 1924
1876

183369
600 008

K. A. சின்னசாமி கண்டர்.

ஸ்ரீ பால சுப்ரமண்யர்.

21 MAY 1924

உ

வேலுமயிலும் துணை.

ஸ்ரீமான் T. A. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் இயற்றிய சாத்துக்கவிகள்.

எழுசீரடி ஆசிரிய விருத்தம்.

கலைமதி வாணர் புகழ்தரு சிகரக்
சனவரை மலர்மலி சோலை
பலமிகுந்தீண்டி இலகு குஞ்சாண்டிப்
பதிவளர் சுகுணன் சீர்வேண்டி
நிலமது புரக்கும் வன்னியர் குலத்து
நிருபனையா சாமி தவத்தின்
நலமுறவுதித்த சின்னசாமிப்பேர்
நாயகனிசையுணர் அறிஞன்.

வேறு.

உரைத்த நூதனமான வர்ணமெட்டுத் தற்கால
உலகுக் கேற்பத்
திருத்த முறத்தனது வினைதீரவென்று முருகனிரு
திருத்தாண் மீது
பொருத்திய இக்கீர்த்தனத்தைக் கந்தருவர் நினைந்துருகிப்
புகழ்வார் மற்றும்
தரைத்தலத்தினிது நிபுண பாடகர்க்கோர் புதுவிருந்தாய்
சமைந்த தம்மா.

மகா-௱-௱-ஸ்ரீ பனமரத்துப்பட்டி பிரம்மஸ்ரீ சுப்பராய அய்யர் குமாரர் குஞ்சாண்டியூர் ஸ்ரீமான் P. S. நரசய்யர் அவர்களால் இயற்றிய

சாத்துக்கவி.

சீர்பரவு குஞ்சாண்டி யூரதனில் வாழ்ந்திடும்
சிறந்த வன்னியர் குலத்து
செழுதிங்கள் போலவே எழிலுடன் புகழ்பெற்ற
சின்னசாமிப் பாலகன்
பேர்பரவு வியாதியால் நைந்துதன் வினைதீர
பெருமை தங்கும்ப மூனிவாழ்
பெருமானை புன்னியே ரசமான பண்ணுடன்
பேரின்ப துதி சந்தமும்
ஏர்பரவு காவடிச் சிந்துகண் ணிகள் வண்ணம்
இசையுடன் கீர்த் தனங்கள்
இனிதாகவே பாடும் குணமான நற்கீதன்
என்னவும் மிக சமர்த்தன்
தார்பரவு கந்தனுய் பார்வதியின் மைந்தனுய்
தரணிதனில் நின்ற வேலா
தயை புரிந் தவரினின் வினைபறந் தேகிடத்
தற் கார்தத ருள் புரிவையே.

விநாயகர் துதி வெண்பா.

அங்குச பாசக் கரனே யானைமுகமானவனே
மங்கையுமை பெற்றெடுத்த மைந்தனே—துங்கமிகு
சங்கீத கீர்த்தனையைச் சாற்ற வருள் சுரந்தென்
பங்கே துணையுற நிற்பாய்.

கலைவாணித் துதி வெண்பா.

வெண்டாமரைப் பூவின் மேலிருக்கும் அன்னமே
தண்டாமரை துதிக்கும் சாரதா—தொண்டாகி
நானுமுனை வந்தித் தேன் நாவிருந்து கீர்த்தனைகள்
தானுரைக்க நீ கருணைதா.

அவையடக்கம் வெண்பா.

எழுத்துடனே சொல்லும் இசை ராக தாளம்.
வழுத்து முறை யறிய மாட்டேன்—பழுதத
சுவை போற் கவி போலும் தூயவர் களாய
அவையோர் பொறுத்தல் கடனும்.

வேறு விருத்தம்.

இன்பம் செழித்து மிக இலகு குஞ்சாண்டியூர்
ராஜ வன்னியர் குலத்து
இயல் புடன் கருணை ஐயம் பெருமாள் கண்டர்
ஈன்றிட்ட சின்னசாமி
வம்பிணியும் மிகுதியாய் நைந்துடல் மெலிந்து நால்
வருடமாய் திடமும் குன்ற
வருத்த மென்மேலு முற திருத்தமாய்ச் சரவணப்
பாதமே செதிய தாக
நம்பியே ராகதா ளங்கள் சீர் ஏர்குறை
நற் பதம் வர்ன மெட்டும்
நாடியே பாடவே எதுமே தெரிகிலா
நாவினுல் வந்த தெல்லாம்
பண்புடன் போற்றினேன் பாவலர்ப் பெரியோர்கள்
பரிவுடன் ஆசிகூற
பாலகன் அடியெனும் சீலமாய் வந்தனம்
பாசமுடனே தந்தனன்.

மாதா பிதா குருதுதி வெண்பா.

மாதா பிதாக்கள் மலரடியைப் போற்றுகின்றேன்
தாதாவா யெந்தனுக்குச் சங்கிதம்—தோதாகத்
தந்த குரு கிருஷ்ண தாசராம் பாகவதர்க்
கந்தமலர்த் தாட்கும் வணக்க.

பரமேஸ்பரர் துதி விருத்தம்.

சத்தியோடுலக மீன்ற தற்பரா போற்றி ஞான
வித்தகா போற்றி நான்கு வேதத்தின் பொருளே போற்றி
முத்தியே தருவாய் போற்றி முக்கணு போற்றி எங்கள்
அத்தனுப் நின்று காக்கும் அருட்பெருங் கடலே போற்றி.

சுப்பிரமணியர் துதி விருத்தம்.

அறுமுகப் பரனே போற்றி அபிலுடைக் கரனே போற்றி
நறுமலர்த் தாரா போற்றி நடமயில் வீரா போற்றி
குறை தவிர் முருகா போற்றி கோவிந்தன் மருகா போற்றி
மறை புகழ் பொருளே உந்தன் மலரடி போற்றி போற்றி.

விஷ்ணுவ்ஸ துதி விருத்தம்.

மாதவா ஹரிமுகுந்தா வாமனுது ளசித் தாமா
யாதவா ஜனகி நாதா யாவரும் துதிக்க னின்ற
கோதிலாக் கருணைவாரிக் குற்ற மெல்லாம் பொறுத்துன்
பாதமே தருவாய் சோதிப் பரா பரா போற்றி போற்றி.

சிவசக்திவ்ஸ துதி எண்சீரடி யாசிரிய விருத்தம்.

ஒளிபாகிச் சிவனுடனே கலந்து நின்ற
ஒருந்திமைய பண்டங்கள் பல பெற்றிட்டாளை
அளிபாரு மலர்க் கூந்தல் மின்னைப் பொன்னை
ஆனந்தக் கடலை யருட் குயிலை வேதக்
கிளியாளை எனைபாள மனங்கொண்டாளைக்
கீர்த்திமிகும் மூர்த்திரட்டூ முதலானாளை
எளியேன் நான் மிகவணங்கிப் பாடியாடி
எடுக்கின்றேன் கீர்த்தனைகள் தொடுக்கின்றேனே.

உ

வேலுமயிலும் துணை.

ஸ்ரீ சிவசுப்பிரமணியர் நூதன
சங்கீதாலங்காரக் கீர்த்தனை.

1. பாசுபதம் போலே என்ற வர்ன மெட்டு.
ராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

கண்ணிகள்.

குணமுடைய கணபதியே குஞ்சரமுகனே எந்தன்
கொடிய வினையை நொடிதனிலே பொடிபடச் செய்வீர்

பக்ஷணமுடன் பால்தயிர பிஷேகம் உண்டவா தீர்
தக்ஷண மடியேனிடரைத் தவிர்த்தருள் புரிவாய்

பாமரர்கள் பாவம் போக்கிடும் பார்வதி தனையா
கோமகனே கோரும் பலனைக் குறைவறச் செய்வாய்

மூஷிக வாகன மேறும் மோதக தரனே
தாசன் சின்ன சாமி துதி சாற்றும் பரனே.

2. ஆரெசையா என்ற வர்ன மெட்டு.
ராகம் செஞ்சுருட்டி ஆதிதாளம்.

பல்லவி

நாட்டினிலே நற்குளக்க ரைதனிலே
நற் காக்ஷி தரும் கணேசா

அனுபல்லவி

வாட்டமில்லாத மாலை பூண்டு
மகிழ்வோடாகுவி லேறித் தூண்டும்
வஞ்சி தேவி பாலனே தஞ்சம் சின்ன சாமியும்

மகிழ்குணனே கணபதியே
யெனையனுகி துணைவருவாய் (நாட்டி)

3. அம்மா மதுரைமீனாக்ஷி என்ற வர்ன மெட்டு.

ராகம் ஆனந்தபைரவி தாளம் ஏகம்

கண்ணிகள்

அம்பாள் உந்தனையல் லாது எனக்
காதர வினி யேது
எந்தன்மீது வாது சுந்தரி யாகாது
இந்த வேளை யோது வாயே என் தாயே (அம்பாள்)

பக்ஷி வாகன மீ தேறி எனை
ரக்ஷி பிர்ம்மனிட பாரி
பார்க்குள்ளவதாரி சீர்த்தி சுகவாரி
பங்கஜா சனமேல் வாசி பாலனுவிலுப தேசி (அம்பாள்)

வேணி சகல கலை வாணி துதி
வீணா கான கல் யாணி
வேண்டும் வரங்கள் தாரும் ஈண்டு கருணை பாரும்
விமல நேத்ரி காரும் இப்போ வாரும் (அம்பாள்)

அன்ன பூஷண வாமி பாலன்
சின்னா சாமி துதி நேமி
அன்பருள் பாலி பொங்கும் தமிழ்க்காமி
எங்கும் நிறைந்த பாரில் துதி போற்றும் (அம்பாள்)

4. சிந்தயமா என்ற வர்ன மெட்டு.

இராகம் பைரவி ரூபக தாளம்.

பல்லவி.

மந்திர மனோகரி சீலி அருள் பாலி
மந்திர மனோசரி சீலி

அநு பல்லவி.

சுந்தரி யலங்காரி சூலிய பிராமி
சந்திர ஜெசன் மோகன வாரி சிங்காரி (மந்திர)

சரணம்

சந்திர சூரியர்களும் இந்திராதி தேவர்களும்
நந்தி நாரத ரோடு கந்தருவ ரிஷிகேசரும்

நாடியே கூடியே தேடியே
நாரணி ஸ்தோத்திரம் செய்திட

நங்கையே யுன் காக்ஷி தந்த
மங்கை யேயிவ் வேளை தன்னில் வாரும் (மந்திர)

ஆதிசிவ சக்தி யுந்தன் அடிமை மைந்தன் அபயம்
ஏது மறியாப் பாலன் நீதி விந்த வர்மம்

ஏற்றியே போற்றினேன் கேடியே
சாற்றியே துதி சின்ன சாமியும்

எந்தன் மீது சிந்தை வைத்து
உந்தன் பாதம் தந்திடும் மகேஸ்வரி (மந்திர)

5. வேணுகானம் செய்தாரே என்றவர்ன மெட்டு.

இராகம் மோகனம் தாளம் ஆதி.

பல்லவி.

சிங்காரி கெம்பீரி வீரி அவதாரி
சிங்காரி கெம்பீரி வீரி

அநு பல்லவி.

ஆங்காரி ரீங்காரி அலங்காரி ஆநந்தி
ஓங்காரி சாமுண்டி உமைசக்தி பாகம் கொண்ட
உத்தம பத்தினி நத்தினே னுந்தனை
ஒப்பிட லாகுமோ இப்புவி தனில்மிகு(சிங்காரி)

சரணம்,

அச்சு பாசியணியும் ஆண்டிச்சி நீலி யுனை
பக்தியாய்ப்பணியும் பாலகி பாலகர்க்கு
புச்சுவ சிம்ம வாகன மேறும் மேட்டி
நகர் தனிலே
மிக்க பேய் பில்லி சூனிய மதனை யோட்டி
பிணியதனை
உக்கிர வேல் சூலாயுத மதனால் வாட்டி
வருந்துவோர்கு
மெய்க்கவே குஞ்சர புரிதனி லுலவியே பேட்டி
கொடுத்து உந்தன்

பாவலன் சின்னசாமி நேமமாய்த் துதி நேமி
பாரினில் காளி கூளி பரி பாலியும் கபாலி

படும் வினை யனைத்துமே நொடிதனி லகற்றுவாய்
பார்வதி உந்தனை நேர்மையாய்ப் போற்றினேன் (சிங்காரி)

6. நெஞ்சமே இந்த என்ற வர்ண மெட்டு.

இராகம் தேசிக தோடி தாளம் ரூபகம்

பல்லவி.

சிவ ஹரனே எந்தன் வல்வினையைத் தீருமே - உந்தன்
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய நற்பதவி தாருமே

அநு பல்லவி.

தவமியற்றிய சான்றோர் களுக்கருள்
தாரும் கணத் துடன் வந்து கோறும் பலன் நேரும் ()

சரணம்.

கைலையில் வாழும் சணதள நாதனே
மகிழுமா தேவி மருவுங் குண நீதனே
கங்கையும் சடையினில் திங்களணிந்தவா
அங்கைமான் மழு வேந்தும் சங்கரனே ஜெக
மீதினி லீசனே தேசிகா
மாசிலா மணியனை யீன்றவா
தாசர்கள் நேசர்கள் துதி செய்யும்
தற்பர சிற்சுக பர (சிவஹர)

மாரனை யெரித்தவா காலனை யுதைத்தவா
மார்க்கண்டனுக்குச் சிரஞ்சீவி தந்தவா
கோரமான வரம் அசுரருக் கீந்தவா
குமரன் சின்னசாமி இணையடி போற்றவே
குருபரா விடமதை யுண்டவா
திரிபுர மதனை யெரித்தவா
குறைதனை யகல மொழிந்துமே
நிறையுடன் கருணையும் பொழி (சிவஹர)

7 ஆரெசையா என்ற வர்ன மெட்டு

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

பாதிமதி சூடும் பரமா உனைப் பூஜித்தாலுன்
ஆசியைத் தந்திடுவாய்

அநுபல்லவி

ஆதியந்தம் முடிவுகாண
அரிபிர்ம்மாதி தேவர்கள் நாண
அன்புடன் கங்காதரா அருள்தந்திடும் சிங்காரா
அடைவுடனே கொடுவினையை
பொடிபடவே ரறவிடுவீர் (பாதிமதி)

சரணம்

பாசபந்த மறவே யுனை
பக்தியுடன்செய் தேன் சிந்தனை
பாலன் சின்னசாமி துதி மாலை கொள்ளும் வாமி
பரமேசா கருணேசா
விஸ்வேசா விசாலாக்ஷி (பாதிமதி)

8 அவதார புருஷன் என்ற வர்ன மெட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

பல்லவி.

அண்ணாமலை யீசா கலியுக கைலை
அண்ணாமலை யீசா
வல்லாள மகா வரகுணபாண்டிய
செல்வ ஸ்ரீகர ஞகை உதித்த (அண்ணா)

அநுபல்லவி.

கண்ணப்ப னெச்சியுண்டு காலவிடத்தை யுண்டு
உண்ணாமலையைக் கொண்ட உமா மஹேஸ்வர ()

சரணம்.

கார்த்திகை தீபம் தவமிழைத்தால் பாவம்
பூர்த்தியாய்ப் போகும்.

நேர்த்தியதாகவே ஸ்தோத்திரம் செய்திட
மூர்த்தியே ஜோதியே காத்திட வாரும் (சா)

பார்த்திபன் தபசுக்கு பாசுப தாஸ்திரம் தந்து
கீர்த்திமான் தொண்டனுக்கு கிருபையாய் மோக்ஷம்தந்த

கீதனே நாதனே நீதனே பாதனே—எந்தன்
வல்வினை போக்கும்

ஏகனே போகனே ஈசனே நேசனே—உந்தன்
அருள் தந்திடும்.

சாற்றியே கவிச் சின்ன சாமி துதிக்கு நீரும்
ஏற்றவிடை மீதேறி எந்தன் துயர்தீரும். ()

9 மாசபைக்கென் வந்தனம் என்ற வர்ண மெட்டு

இராகம் மோகனம் தாளம் ரூபகம்.

பல்லவி.

பா தமே தாரும் ததிங்கணத்தோ மென்றாடிய
பா தமே தாரும்

அநுபல்லவி.

நீதமுடன் காளி வாதுபுரியவே
மாதவர் யாவரும் மயங்கித் தவிக்கவே
நாரதரிசைபாட நந்தி மத்தளம் கொட்ட
தாதா கிடதக ஜெணுதக ததிங்கணத்தோமென்றாடிய(

சரணம்.

மங்கை சிவகாமி மருவும் நடராஜா
சங்கரனே சிவ சாம்ப மனோகரா

அந்தணர் வாழ்தில்லை ஐயனே மெய்யனே
எந்தன்வினைபோக்கி ஈடேற்றச்செய்வாயே

சந்தத முந்தனை சிந்தையில் வந்தனை செய்தடி ஏற்றி
போ ற்றி னேன் பரிவுடனே
அந்தகன் வந்திடு முந்தியே சொந்தமா யெந்தனை-தேற்றி
ஆ ற்று வாய் தடையறவே
தஞ்சமென்றேயுனை அஞ்சலி செய்திட
தாசன் சின்னசாமி தமிழ் மாலை சாற்றிட

கொஞ்சிய உமையொடு நீரும் கோரிய அடியனைக்காரும்
சஞ்சல மதனைத்தீரும் ததிங்கணத்தோமென்றாடிய(

எமன்வந்தால்-பொல்லாதவன் என்ற மெட்டு.

10 இராகம் பியாச்கு தாளம் ஆதி.

பல்லவி,

படமுடியாதினி பாலசந்திரனே
படமுடியாதினி

அனுபல்லவி.

சடைமுடியுடன் வந்து தமியேனுக்கருள் தந்து
கடைத்தேற வழிகொடும் காணுநானே மறந்து (படமு)

சரணம்.

மலையரசன் மகனே மருவும் சொக்கேசா
மலையரசன் மகனே

வலையில் பட்டகலைபோல் வன்பிணியால் நொந்து
அலைகடல் துரும்பைப்போல் அலைந்துத்திரிந்து ஆழ்ந்து

சிலைமதன் கணையாலே தலைமயக்கமேறி
பல பல விதமான படுநரக வேதனை

பாரும் உந்தன் கருணை தாரும் எந்தன் குறையைத்
தீரும் மைந்தனிதம் கோரும்

நேசன் சின்னசாமி தாசன் துதிக்கிரங்கி
பாசமுடனே நீரும் பரமபதத்தை நேரும். ()

11 ஏன்ன சொல்லுவாய் மனமே என்ற மெட்டு

இராகம் தோடி தாளம் ஆதி.

பல்லவி.

எங்கே நான் கண்டு தேடுவேன்—இந்த
உலகத்தில் பலன்தரும் குணபத்ர னிவரைப்போல்
யாரை சமமாய் காடுவேன்

அனுபல்லவி.

செங்கோட்டு மேலவனே செஞ்சடையம் புலியோனே
பிரிங்கிமகாரிஷிக்கு ப்ரீதியாய்க் காக்ஷி தந்து

பிரியமாய் பாரிக்கு உரிமையாய் தேகத்தில்
அருமையாய் பாகித்த அர்த்தனாரீசா உனை (எங்கே

சரணம்.

தீராவினை தீர்க்கும் தேவனே உந்தனைத்தொழ
ஆராத்துயரகற்றும் நீதனே

வாரமும் மாதமும் வந்துனை சேவித்தோரை
கோரமானஎம தூதர்கை யணுகாமல்

குஞ்சித பாதனே வஞ்சியின் போகனே —வந்து
உன்னருள் தந்து

குங்கும தேகனே ரஞ்சித மாகவு —கந்து
புரந்தருளும்

தஞ்சம் சின்னசாமி செந்தமிழ் அதிநேமி
நெஞ்ச மிறங்கிவாமி வெந்துயர் தீரும் சாமி

தானவர் வானவர் மானவர் போற்றிடும்
தங்கமே சிங்கமே புங்கவா உந்தனை (எங்கே)

12 இராகம் தேசிக தோடி தாளம் அடதாளம்.

பல்லவி.

அருளுவாய் சித்தா வரம் தருகுவாய் நித்தா
நித்தா சுத்தா அத்தா முத்தா எனைக் ()

அநுபல்லவி.

இருளில் நின்று ஏங்கித்தவித்திட
உருகவில்லையோ உந்தன் மனதும்
கருகிவாடியே நின்ற என் முன்
கர்ணமதிலொளி தோணிடவரம் (அருளு)

சரணம்.

இத்தனை நாளுனை மறந்தேன் என்வறுமையால்
மெத்தவும் மலிந்து இருந்தேன் சஞ்சலிரி

சித்தேசா உந்தன் மருந்தை தந்தருளும்
உத்தமா கிருபை புரிந்தே என் விஷமதை

ஓட்டிடாய் வெகு தாஷ்டிகத்துடன் மேட்டிமையாக
சதா மனச்
சாக்ஷியாகவே கோஷ்டி செய்வேன் காக்ஷிதந்திடுவாய்
அமாவாசையில்
நாட்டமாகவே கூட்டம் கூடியே பேட்டிகாண சிலர்
சேடியமார்கள்
பாட்டினேடுகை நீட்டுடன்பல நாட்டியம் செய்வார்
சேவை காண

பக்தன் துதி சின்ன சாமி
பாடிடும் அருள் வண்ண நேமி
மிக்கசே யெனும் பக்குவத் துடன்
இக்கணம் வினை கக்கவே வரம் (அருளு)

13. இராகம் சங்கரா பரணம் தாளம் ரூபகம்.

பல்லவி.

வரம் தருவாய் வாசா கயிலாசா நீ (வரம்)

அனுபல்லவி.

பரம் பொருளே வர மருளே
பால நேத்ர நீல கண்ட
மறை முடி வாகிடும் நாதா சுரர்தனை யாண்டிடும் தார
மங்கல நாதனே வாரும் இங்கித மாகவே நீரும் (வரம்)

சரணம்.

சிரமதில் கங்கை திங்களும் சூடிய
கரமதில் துங்க மான்மழு வேந்திய
பரமனே யுந்தன் பாதம் பணிவோர்க் குன்
னருளது தந்து அரும் புகழேற்று வாய்

ஆருத் ரா தெரிசனமே
கா ணுற்றிடில் வெகு கனமே
அத்தனே யுன் சித்த மதை
வைத்தரு ளும் பக்தனென் மேல்

ஆடிட சின்ன சாமித்துதி பாடிட கைலாசப் பதி
அன்புட னடி யெனேக்காரும் வன்பிணி விலகிட நீரும் ()

14. மாலிகை.

நந்தி நராதர் துதி நாதா உன் பாதம் கெதி
நாத நாமக்கிரியால் நாடி வர மருளாய் (நந்தி)

சந்திர ஜடாதரனே சாவேரிக் குடை யோனே
இந்திராதி தேவர் போற்றும் ஈசா எனையாள் நேசா (நந்தி)

கபில வாகன மேற்றும் கடவுளே வரம் தாரும்
கன்னடா வதை நீரும் கருணை புரிந்து பாரும் (நந்தி)

சுவைதரும் அத்தாயெனேச் சுகித்திட சித்த மதை
சுருட்டியாலே கிருபை வகித்தருள் வாயே (நந்தி)

மாதவர் தினம் துதி நாதனே வரமருள்
ஆதவன் புகழும் ஜோதி ஆரபிக்கு கந்த நீதி (நந்தி)

பக்தர்களைக் காத்திடும் பரமனே யுன்னருளை
வைத் தென் வினை தீர்த்திடும் மத்ய மாவதியாலே (நந்தி)

சாகச மான சாம்ப சிவனே
மோகனத் துதியால் உகந் தெனை யருள்வாய் (நந்தி)

பக்தி யுடன் தொழுதேன் பைரவி நாதனே
வைத்திலிங்கா நீரும் வரங்களும் தருகுவாய் (நந்தி)

சொல்லும் சின்ன சாமி துதித்திடும் அந்தரி யாமி
பல் வினை யகற்றிடும் பரமகல்யாணி குண (நந்தி)

15. இராகம் பியாக்கு ஆதி தாளம்.

பல்லவி.

ஐயனே அரி ஹரனாய் வந்த மெய்யனே

அநுபல்லவி.

மெய்யுடன் துதித் தோரை கைவிடாமலே நீரும்
துய்ய வரங்கள் தாரும் துதித்திடு வோரைக்காரும் ()

சரணம்.

குணமே பலிகொள்ளும் பூத கணமே
கனம யூரனுடனே காண அசுரர்களை
இனத்துடன் மடித்தவா எங்கும் துதிகொண்டவா—முழு
மனதுடன் பிரார்த்தனை வாங்கியே யுண்டவா
மனுக்களும் துதிக்கவே கார்த்திட ஆண்டவா
வாரும் வல்வினை தீர்த்தருள் தாரும்
கோரிடு வோரிட கொடும் துயரதைத் தீரும்
குமரன் சின்ன சாமி துதிக்கிரங்கி நீரும்
குரு பரா இடாற கொடும் தோஷம் விலகிட
குஞ்சர புரிதனிலே கஜ துரகமீ தேறும் (ஐயனே)

16. வெள்ளிமலை யொத்த பல என்ற வர்னமெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

கண்ணிகள்.

நகரத்துத் தென்புறத்தில் சோலை அதி
நடுவிலமர்ந்த தொரு சாலை உயிர்
நாரணன்ரன் செயலால் சீருட னவதரித்த
பாலன் குண சீலன்

சிகரக் கிரியும் மாலும் மேலே குளிர்
செந் நெல்விளையும் ஒடை கீழே அகம்
சீறிய மதகரியும் ஏறும்பரி வாகன
முன்னாலே மகிழ் வாலே

குஞ்சரபுரி யுலாவு வோனே கொடும்
துன்பமதை யகற்றும்சீ மானே மேல்க்
கூறிய நகர் நடுவிற் சீறிய்மகா உக்கிரத்
துடனே அம்ம னுடனே

சஞ்சல மதனை நீர் தீரும் கூடி
அஞ்சலி செய் யவும் முன்னே வாரும் வெகு

சாதனை யுடன் மகிழ்வாய் சோதனை செய்து நகரைக்
காரும் கண்ணால் பாரும்

சத்த கன்னி மார்களுடன் கணமும் தங்க
உத்தமர்கள் வந்து போற்ற தினமும் பொல்லா

டாகினி மோகினிப் பேய்கள் சூனியங்க ளேவ லோட்டும்
குணமும் உந்தன் மனமும்

எத்திசையும் போற்றுங்குண நீதனே எழில்
பக்தன் சின்ன சாமி துதி நாதனே நான்

எத்தனை பிழை செய்தாலும் அத்தனையும் பொறுத் தாள
வேணுமே அருள் பூணுமே

17. எஜி வாரீதனு என்ற வர்ன மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

நாரணனே பரி பூரணனே
பாரமிது மலையோ பார்ப்பதுவும் தொல்லையோ
காரணு படும் கஷ்டம் சகிக்க வில்லையே

என் மீது சள்ளையோ
மனம் ஏனோ வல்லையே

ஞாயமோ உந்தனுக்கு வா வா வா வா
வந்துன் மருந்தெனக்கு தா தா தா தா

நேயன் சின்ன சாமி தாசன் புகழ் துதி
யா கு மே வை குந்தம் விட்டு—வா (நார)

18. இராகம் காம்போதி தாளம் ஆதி.

பல்லவி.

ஆதாரம் வேறே இல்லையே எனக்
காதாரம் வேறே இல்லையே

அடியவ ரிடர்தனை
பொடிபட ச் செய்தவா (ஆதா)

அநு பல்லவி.

பாதார விந்தமதை பக்திபாய் சேவித்தோரை
காதவழி க்கப்பாலே காலன ணுகாமலே
நேசமுடன் லச்சுமி தேவியுடன் வந்து
இனியவ ருனைத்தொழ இக பர பதம் தாரும் (ஆதா)

சரணம்.

தொண்டர்கள் தாசனே பண்டரி நாதனே
துன்ப மணுகிடாமல் வந்தென்னைக் காருமே
எண்டிசை புகழ் சக்குபாய் ஏற்ற துளசி கபீர்
இணையடி போற்றவே மனது தேற்றிய நாதா
கருடனேரி
ஏற்றியே சூக்ஷியே காக்ஷியே தந்திட்ட பாதா
கிருபை வைத்து
நன்பன் சின்ன சாமி நாடும் துதிக்கிரங்கி
வன்பிணிகளைப் போக்கி வரும் துயர் தனை நீக்கி
வாமன சேசவ ராகவ தீரனே
சாமள வர்ணனே சக்கர தரனே
பாலகன் மைந்தனுக் குன்னருள் தந்திட
வேணுமே சீலனே மோகனா எந்தனுக் ()

19. இராகம் சாவேரி தாளம் ஆதி.

பல்லவி.

ராமா ரவிகு லாதி சோ மா தசரதனின்
ஸ்ரீமா எனையாள் பரந் தாமா அயோத்தி ரகு()

அநு பல்லவி.

காமாதிமாயப் பிரபஞ்ச மெனும்
கடலி னுள்ளாழும் தெரியாமல் நுழைந்தேன்
பூமனே ஓடம் கொண்டு வந் தென்னை
புவி தன்னி லேற்றி பிழைக்கச் செய்வாயே
பூதல லங்கை ராவண சூரனை
வாதனை செய்துயிர் மாள வே முடித்திட்ட (ராமா)

சரணம்.

நேமமுடனேயுனை ராமா வென் றொரு தரம்
நாம முச்சரித்திட்டால் பாவங்கள் பறந் தேகும்
வாமன மச்ச கூர்ம வராக அவதார
மாரா அசுரர் சம் ஹாரா ரணதீர சிங்
காரா அயோத்தியாளும் ராஜ
கோசலை யீன்ற
பாலா அன்பர்கள நு கூலா எந்தனை யருள்
சீலா ஜனகன் மகள் லோலா
பாச முடனே
தம்பி பரதனுக்கு தாளடி தந்தவா
அன்பன் சின்னசாமி அடிபணிக் குகந்தவா
நம்பின என்னை நட்டாற்றினில் விடாமல்
நாயக தாயக மாதவ கோபியர்
காமனே எந்தனைக் கடைத்தேற வழிவிடும் (ராமா)

20. பனுகைசி பகார் கை சி என்ற வர்ன மெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

பல்லவி.

காஞ்சி நகர் வரத ராஜனே பக்தரைக்
காக்கும் தீரனே
வாஞ்சை மிகும் வனிதை சீலனே கெருட
வாகனக் கோனே

தொகையுறு.

பஞ்சவர் தேவியும் அஞ்சலீ செய்திட
பங்கமில்லாமல் கார்த்தாய்
குஞ்சரம் கங்கையில் அபயமென் றோல மிட
கொடு முதலை யதனை மாய்த்தாய்

பாட்டு.

அச்சுதனே உன்னருள் தாரும் தந்துந்தன்
அன்பரைக் காரும்

மச்சாவதாரனைக் கண் பாரும் இல்லாவிட்டால்
மயங்கு நான் நேரும்

தொகையறா.

துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனா
தொண்டர்கள் போற்ற வந்தாய்

இஷ்ட தாசன் சின்ன சாமி யேற்றும் துதிக்
கிரங்கியே யாள் முகுந்தா (காஞ்சி)

21. இவளழ கென்ன சொல்லுவேன் என்றமெட்டு

இராகம் தேசிக தோடி தாளம் ஆதி.

பல்லவி.

திருப்பதி ஸ்தல மகிமை இதைத் தெரிசித்தாலே பெருமை
திருப்பதி ஸ்தல மகிமை

அநு பல்லவி.

நறுமலர் பூத்திடும் நாற்புரம் சோலையும்
மரகத மிழைத்திட்ட மண்டபச் சாலையும்
கதிதரும் மூர்த்தியின் கான விநோதமும்
கண்களில் பார்த்தால் கடைத் தேற வழிவிடும் (திரு)

சரணம்.

கோபாலா கோவிந்த ராஜ
தயாளா அலமேலு மங்கை
மணாளா அன்பர் களநு
கூலா அசுரர் காலா

நவமணி ஹாரமும் ரத்ன கிரீடமும்
தன நிதி உண்டியும் தங்கப் பட்டாடையும்

நவனிதம் தரித்த நரஹரி புருஷனை
நிதமுடன் துதித் திடவே
வினை பறந் தோடிடுமே
தெரிசனம் தந்திடுமே
பர்கதி வந்திடுமே

நாவலன் சின்ன சாமியும் போற்றி
நயமாய்க் கவிச் சாற்றி
இதமாய்ப் பணிந் தேற்றும்
நாரணன் பாதத்தைத் தெரிசித்தால் போதுமே (திரு)

22. தீபமோகனம் என்ற வர்ன மெட்டு,
இராகம் இந்துஸ்தான் பியாக்கு தாளம் ஆதி.

பல்லவி.

பன்னக சயனா பரமபுருஷா ரங்கா
பன்னக சயனா

அநுபல்லவி.

செந்நெல்விளை காவிரி பெண்ணை கொள்ளிடமேவும் ()

சரணம்.

சங்கு சக்ர தரனே ஸ்ரீ ரங்க நாதனே
லங்கை வீபீஷணன் மங்களமாய்த் துதிக்கும் (பன்)

தொகையறு.

நரை திரை பிணி மூப்பு
நால் வகை பேத மின்றி
கரை பேற வழி காட்டும்
கடவுளே யுன்னை யன்றி

பாட்டு.

சஞ்சலம் தீர்ப்பவர் இனியுண்டோ புவி மேலே
மைந்தன் சின்னசாமி செந்தமிழ்த் துதி மாலே (பன்)

23. இராகம் பிலஹறி தாளம் ரூபகம்.

பல்லவி.

தொண்டர்க் கிரங்கி ய வா
துணைவனே அதிசூர ரகமகிழ்
குணநிதி உனைத் துதி செய்திடும்
தொண்டர்க் கிரங்கி ய வா

அநுபல்லவி.

அண்டர்கள் துயர் தனை தீர்த்த
புண்டரி காக்ஷா பார்த்தன்
அண்டயில் சாரதி யோட்ட
மண்டல மெங்கினும் போற்றும் (தொண்டர்க்)

சரணம்.

நரசிங்க வதார அனந்த பத்மநாப
இரணிய சம்ஹாரா யேந்தி மை சிங்காரா
அரவணைத் துயிலும் நாதா பரமனைப் புகழும் பாதா
சிறுவனைக் காரும் தேவே பரகதி தாரும் கோவே

அன்பன் சின்ன சாமி மைந்தன்
செந் தமிழ்க் குகந்து உந்தன்
அருளது பெருகவே உருகியே
கன முடன் மனதினில் துதி செய்யும் (தொண்டர்க்)

24. மஞ்சு நிகர் குந்தள மின்னே என்ற மெட்டு

ராகம் செஞ்சுருட்டி தாளம் அட தாளம்.

குஞ்சர புரகிரி வாசா பக்தியாகவே சத்தியபாமா
கொஞ்சிடும் ருக்கு மணிநேசா உயர்

கோபுரக்கிரி மேவு சித்திர மாக நற்குடை யாக பற்பல
கோகுல பிர்ந்தாவன லோலா லீலாவிநோத மாயாவதார
கோமள யசோதையின் பாலா

கஞ்சனை வதைத்திட்ட மாரா ராஜ கெம்பீர
அருள்சிங்காரா கெஞ்சுகிறேன் உந்தனை நேராய் பல

காலமாகுதே சீலனே இவ் வேளைதன்னில் பாலனென்னிடர்
பஞ்சு போல் பறந்த கன்றிட புரிவாய்கிருபை
புகுந்தேன் அவை சஞ்சலமது பறந்திட
கட்டுப் படும் மந்திர மூலமே பாச முடனே• தாசர்கள்
கையில் குட்டுப் படும் தந்திர லோலனே உந்தன்

காதல் மிகும் பாதமலர் நீதருவாய் வாதையற
குற்ற மில்லாமலு மென்னையே சுற்றம் பாரா
கிருஷ்ணவதாரா கொடும் உந்தன் பதம் தன்னை யே

துஷ்டருக்கு சிக்ஷை செய்வோனே கோநகரிலே
ஆவணியிலே அஷ்டமிக் குகந்திடும் சோனே சிறு
துய்யசே யெனும் வெய்ய ஆவினின் நையபாலிடும்
பையமாதெனும் இஷ்டன்சின்னசாமி துதியாலே எற்று
கின்றேன் கூற்றுவன் வாரா திக்ஷணம் ரக்ஷித்திடும் மாலே

25. இராகம் கன்னட தாளம் ஆதி.

பல்லவி.

என்ன சொல்லுவேன் உந்தன் மகிமை
இன்னம் கொள்ளுவேன்

அநுபல்லவி.

புன்னக சயனனே பாண்டு ரங்கனே
முன்னவன் பிரகலா தனுக் கிரங்கியே
நன்னய முட நரசிங்க ரூபமாய்
இன்னலைத் தீர்த்தருள் தந்திடும் காக்ஷியை (என்ன

சரணம்.

சந்திர வதனனே சாமள வர்ணனே
மந்திர மூலத்தை எங்கும் விரித்தோனே
அந்தர வாசிகள் அரும் இடர் தீர்த்தோனே
எந்தன் துயரதை இக்கண மகற்று வாய்

எத்திடு மிரணிய கசிபனைப் கோரமாய்க் கிழித்து
கிரே தா யுகத்தில்

உத்தம லங்கை வீபீஷணனுக் கருள் அளித்து
திரே தா யுகத்தில்

ஈத்திடும் பார்த்திபனுக் கிதம் சாரதி நடத்தி.
துவா பரியில்

பக்தியாய் துதித்த பேர்க் கெத்தனை யோபதம் கொடுத்து
கலி யுகத்தில்

நங்கபுர நரசிங்க ரூபனே பங்குனி உத்திர லங்கிர்த மாரனே
பொங்கிய தமிழ்த்துதி சின்ன சாமியும்
போற்றிடும் லக்குமிக் கேற்றிடும் நாதனே (என்ன)

26. முருகன் திருமால் மருகன் என்ற வர்ணமெட்டு

இராகம் மத்தியமாவதி தாளம் ரூபகம்.

பல்லவி.

மாயன் மருகா மலையிறங்கி வருவாய்
வர நிபுண பரம குண
இது தருணம் எனைக் காத்திட (மாயன்)

அநுபல்லவி.

நாயினும் கடை யோனுகி நின்றேனே
நாஞ வித லீலா வி னோத அவதார (மாயன்)

சரணம்.

சரவணபவ சண்முக குக தாசர்பணி பெருமானே—மூகச
சுந்திரா இந்திரா சுந்திரா உந்தனைச் சரணம் புகுவேனே
அரகர சிவ ஆனந்தமே எந்தன்
ஆராத்துயர் போக்கிடவே தீராவினை நீக்கிடவே ()

பந்த பாசத்தாலே நொந்து கிடப்பதைப்
பாரா திருப்ப தேனே நீ
எந்த விதத்திலும் ஏமாற்றம் செய்யாமல்
இக்ஷணம் ரக்ஷிப்பாயே
மைந்தன் சின்ன சாமி வந்தனை செய் நேமி
மங்களமாகவே இங்கித சங்கீத கோஷ்டிகள் நடமிடும்

27. கற்பூர தீபாரதனையே என்ற வர்ண மெட்டு.

இராகம் மத்தியமாவதி தாளம் ஆதி.

பல்லவி.

அபரஞ்சித மான பொருளே
குகன் நிறை யுறை குறை யிலா
பதினறை மாத் (தபரஞ்சித)

அநுபல்லவி.

கபிலை வாகன மேறும் கைலை மலையில் வாழும்
கடவுளின் குமரனே படமுடி யாதினி
அடைவுடனே யெனைத் திடமுடன் கா (ரபரஞ்சித)

சரணம்.

அரிய பெரிய மணியே தாச நேச
ரன்பிற் குகந்த கனியே
கரிய முகத் தோனுக்கு உரிய சகோதரனே
காலனைப் போலவே வேலுடன் றேங்கியே
மாளவே அசுரர்கள் பூதலம் தனிலே
கானவர் வானவர் தேவர்கள் மூவர்கள் கண்டு
மனமகிழ்ந்து
கைத்தாளம் துத்தாரி எக்காள சின்னங்கள் கொண்டு
முழுங்கிடவே
அந்தர வாசிகள் சந்தண புஷ்பங்கள் இரைத்து
ஜே ஜே ஜெயவென்று
அந்தணர் ஆகம சாஸ்திர வேதங்கள் துதித்து
கூத்தாடி நின்று
தெண்டபாணி உந்தன் சீர்த்தி தினம் பாடி
மண்டல மெங்கினும் மங்களம் தங்கிட
வண்டமிழால் சின்ன சாமியும் துதி (அபரஞ்சிச)

28. மன்னு தந்திடுவாய் என்ற வர்ண மெட்டு.

இராகம் பியாக்கு ரூபக தாளம்.

பல்லவி.

மயி லேறி யே வா வந் தென்னைக் காவாய்

அநுபல்லவி.

தாயு முனையல்லால் வேறு துணையு முண்டோ
தாயும் நீ சேயும் நான்
தப்பான ஜெனனத்தில் இப்படி நானலைவதுமே
ஒப்பாகு மோ உமக்கு அப்பா பழனிமலை
ஆண்ட வனே கிரித் தாண்டவனே (மயிலேறி)

சரணம்.

தாண்டவ மாடிய சங்கரன் மைந்தனே
சதுர் முகனுக்குச் சிறைதந்த கந்தனே

தஞ்ச மென்றோரைக் காத்தவனே
சஞ்சல மதனைத் தீர்த்தவனே [வனே
தாருகா சூரனை வென்றவனே தையல் வள்ளியை மணந்த
தாசன் சின்ன சாமி துதி சாற்றிடும் மெஞ்ஞான சீலா

சந்தமும் உத்தன் பாதம் எந்த நாளும் சிந்தனையில்
தரிக்கச் செய்வா யநுகூலா சத்திய சீலா
உமைபாலா வடி வேலா (மயி)

29. இராகம் செஞ்சுருட்டி ஏக தாளம்.

பல்லவி.

சிங்கார வேல் முருகனே எனையாளவா வா
சிங்கார வேல் முருகனே

அநுபல்ல்வி.

எங்கும் புகழ் படைத்த ஈசா சுயம்பிரகாசா
தங்கும் பழனிப் பதி தலமதில் வாழும் நேசா (சிங்)

சரணம்.

மாது குறவள்ளி சீலனே—மார்பில் கடம்பை மாலை
மணக்கும் மங்கை தெய்வ யானை லோலனே
சங்கு சக்கரம் தரித்த கண்ணன் மருகா உந்தன்
பொங்கும் மயில் மீதேறி புவியில் பவனி வரும் (சிங்)

பக்தர்கள் சங்கீத மோகனு—மங்கள குங்கும இங்கித
பரவச சித்தர்கள் கொண்டாடும் யோகனே
சிற்சபை யோர் நடிக்க சின்ன சாமி துதிக்க
கற்பூரம் சாம்பிராணி வாசம் கலந்து மகிழ்ந்து வீசும்(சிங்)

30. இராகம் தேசிக தோடி ஏகதாளம்.

பல்லவி.

ஆசை நேச தேசிகா தேசியப் ரகாசனே
மாசிலா மணியனே ராஜ தீர கெம்பீரனே

Q26:41 N24
183869
சென்னை-600 008

அநுபல்லவி.

தேசர்கள் புகழ்ந்திடும் தென் பழனியில் வாழ்ந்திடும்
ஈசனே விஸ்வசனே ஜெக தீசனே ப்ர காசனே குக

தாசர்கள் தொழும் வேலனே சப்த ரிஷி
கேஸ்வரர் துதி யுமை பாலனே (ஆசை)

சரணம்.

கரிமுகன் சகோ தரா கனமிகு வசீகரா
திரிபுவன சுந்தரா தேவி

மகிழும் கண்ணியா
துயர் தீர்க்க வந்த புண்ணியா
கழு மலை சுப்ர மண்ணியா
லோக ஜீவகா ருண்ணியா

ஜெய சீலா அநு கூலா அருள் பாலா வடி வெலா
என்குறை தீர்த்தருளும் நாதனே
குமரன் சின்னசாமி போற்றும் குன்றின் மேவும் நாத கீதனே

31. யாரென்று மிரட்டுரீர் என்ற வர்ன மெட்டு.

இராகம் சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

ஏனிந்த சம்சாரத் தொல்லை அந்த ஈசனருள் வடிவை
பூஜித்திடாமல் நமக் கேனிந்த சம்சாரத்தொல்லை

அநுபல்லவி.

கான நாரதர் குற மானைக்கண்டு புகழ
களைத்து இளைத்த கடவுளைத் துதி நமக் (கேனிந்)

சரணம்.

வேடனுருவாய் வந்து வேங்கை மரமாய் நின்று
நாடிய பெண்ணைக்கண்டு வாடியண்ணனைக் கொண்டு

நடத்தி முடித்து துடித்து எடுத்து
நயமாய மயில் வா சனமீ தினில் மலை

நாடியே வரும் பொழுது வேடுவர் குறவர் கண்டு
நாணியை யிறுக்கி வில்லில் கூறிய பாணம் தொடுத்து

800 003-

அக்ரமிக்க உக்ர முற்ற
சத்தி பெற்று வெற்றி யுற்ற
அருவே குருவே திருவே மருவே
அறிவாய் பரமே படும்வே தனையை

ஆகுலம் அணுகிடாமல் தாசன் சின்னசாமி துதி
வாசனே மனமிரங்கி பாச முடனென்னைக் காரும் (எனி)

32. இராகம் காப்பி ரூபக தாளம்.

பல்லவி.

வருவாய் மயிலேறியே என் நேரினிலே (வருவாய்)

அதிசுர ரகமகிழ் துதி செய்யும்
அடியவ ரிடரும் குண நிதி (வருவாய்)

அநுபல்வி.

குருமுனிக் கருள் தனைப் புரிந்தவா
கோறிய வடியரைப் புரந்தவா
பரமனே குஞ்சரி மருவிய
சரவணனே சிவ சண்முக (வருவாய்)

சரணம்.

சங்கரனுக்கு நேர் ஐந்தெழுத் தோதிய
மந்திர மூலத்தால் தந்தையைப் போற்றிய
தணிகாசல முருகேசனே துணையாரெனக் கிலையீதென
தங்கும் படி புகழ் சிங்கம் யெங்கும் துதி புரி சங்கம்

முற்று மற்ற கற்ற நற்ற வத்தி லுற்ற
பக்த ரத்ன மெச்சும் சக்தி பெற்று கொற்ற

தந்தையே எந்தையே சிந்தையில் வந்துனே
மைந்தன் சின்னசாமி செந்தமிழ் சாற்றிட

தயவுற்றினி வரம் பெற்றிட
நம னெற்றிடும் குண பத்திர
நயமுட னிகபர பதவியைத்
தருமெனக் குதவியே சரவண (வருவாய்)

33. அப்பாடா இவள் நீலிபடா என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாச்கு ஆதி தாளம்.

கண்ணிகள்.

முருகேசனே உனைத் துதியாமலே
பரமேசனே மனம் வாடுதே

மனம் வாடுதே தினை மேகுதே
சுகம் மாறுதே பிணி மீறுதே (முருகே)

கருணையங் கடலே கண்ணமு தேயுனைப்
பெருமையுடனே யான் போற்றிடுவேன்

பரம் பொருளே யெனைப் பது கார்த்திடுவாய்
பக்தரைக் கார்க்கும் கனிரசமே (முருகே)

குஞ்சித பாதா குமரவேல் முருகா
தஞ்சமென் றோர்க் குந்தன் தாள் தருவாய்

செஞ் சொற் சின்ன சாமி செந்தமிழ் பெருக
அஞ்சலி செய்திடும் திரு மருகா (முருகே)

34. இராகம் பியாக்கு ஏக தாளம்.

பல்லவி.

காரணா உன் மீதிலாசை யாகினேன் நானே
கருணைபுரிய தருணமிதுவே சரணம் சரணம் வா
ஜா ல மா கா தே (காரணா)

அநுபல்லவி.

நாரணன் மருகா பார்வதி குமரா
நான் கொண்ட விரகம் தீரும்
முகம் பாரும் இதம் கூறும் பதம் தாரும் நான் பர தே சி()

சரணம்.

எண்ணங்களும் மாறுதே எந்தன் துயர் மீறுதே
புண்ணியா இவ்வேளையில் புந்தியில் புகலுவாய்
கந்தனே வரு குவாய் எந்தனை மருவ வே
குன்றில்வாழ் முருகனே வா வாது ஆ காது

பக்தன் சின்ன சாமியும் துதி
சித்தர் பண்ணவர் நேமியும் புகழ்
சத்தியின் சிவ பாலனே குண
சுத்த சத்துவ மானனே தவ
யோகனே பா க னே
அய்யனே துதி
மெய்யனே முரு
கையனே எழில்
துய்யனே யெனைக்
கா வா யே அன் பாய் நானே (காரண)

35. இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி.

பல்லவி.

வழியே தருவாய்
அடர் வேலினை நான் திடமுடனேகவே()

அநுபல்லவி.

கழியாலடித்த காய்போல் கசங்கி
புழுபோல் துடித்து பதைக்கு மெனக்கு (வழி)

சரணம்.

நல்லிருள் நீக்கியே செல்வழி காட்டும்
நாடிய பேதைக்குத் தாய்மன மூட்டும்
வல்வினை போக்கி வரும் துயர் நீக்கும்
பல்லுயி ரனைத்தும் பாது கார்த்தருளும் சீலா
மங்கை வள்ளிம ணாளா
கானப் பிரிய லோலா
அசுரர்காலா
பந்த பாசமதை நீக்கியே எந்தனைக்காரும்
சரவண னே
சொந்தமதாகவே உந்தன் பதமதைத் தாரும்
மனோகரனே
கனியே ரசமே பாகே தேனே
மணியே அளியே ஒளியே கிளியே

நன்னய விகசித கிடகுன மதிசய
கண்ணிப ருன்னையே எண்ணியே துதிசெயும்

சின்னசாமி சொலும் செந்தமிழ்க் குகந்து
தென்னுல காதிபன் அணு கிடாமலே (வழி)

36. நாரே நார்க்கர் என்ற வர்ன மெட்டு.

இராகம் பியாக்கு தாளம ஆதி.

பல்லவி.

ஆறுமுகனே குக தாசர் பெருமானே

அநுபல்லவி.

பாரிலுனைப்போலுண்டோ பழனிமலை யாண்டவா (ஆறு)

சரணம்.

சுடரொளி தீபமே சுப்ரமண்ணியனே
கடலொலி போல் முழங்கி கதிரொளி போல் விளங்கும்

தொகையறு.

அப்பனே சுப்ரமே ஒப்பிலா நரகத்திற்
காளாக்கி எனைப் பார்க்கவோ

தப்பிலா மார்க்கத்தில் சண்முகா எந்தனை
தள்ளுவதுன் கடனல்லவோ

பாட்டு.

அஞ்ஞானம் போக்கிடும் மெஞ்ஞானம் தூக்கிடும்
செஞ்சொற் சின்னசாமியும் செய்யும் துதி நேமியே (ஆறு)

37. வருகிருனிதோ என்ற வர்ன மெட்டு

இராகம் நாத நாமக் கிரியை ஆதி தாளம்.

பல்லவி.

துணையே வருவாய்
சுடரொளி தீபமே தனி வழி யேகிட (துணை)

அநுபல்லவி.

பிணை யொடு—நடமிடும் பேடு போலவே
குணமுட னினி யெனைக் சோதிலாமலே
கனமுடனடி யெனுக் காதரவாகவே
மனமகிழ்ந் தழகிய மாமயிலேறியே (துணை)

சரணம்.

தாயுடனிருந்த சேய் பிரிந்தது போல்
தவிக் கவுமாக உந்தன் சம்மதமோ
தீயதனில் விழுந்த சிறுபுழுவது போல்
திகைத்துத் துடிக்க உந்தன் செயலிது வோ
மாய் கையிைைலிந்த மானிட ஜெனனமும் எடுத்து
என்ன பலன்
நாய் நரி கழுகுகள் பிடுங்கியே தின்னவரும் அடுத்து
ஆவி போனால்
தூய் மை சேர் கழுமலை யிறங்கியே சத்திவேல் பிடித்து
மன மிரங்கி
வாய்மை நேர் சிவ சுப்பிர மண்ணியனே வரம் கொடுத்து
நமனையும்
வந்திடாமலே யெந்தனைக் கார்த்திடும்
செந்தமிழால் சின்னசாமி துதித்திடும்
கந்தனே யுனது கழலடி பணிந்தேன்
காக்ஷி கொடுத்திட தாக்ஷி யில்லாமலே (துணை)

38. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

வரமருளிய திரு மருகா உனைக்
குரு முனி தொழுயிட ரருக (வர)

அநுபல்லவி.

சுரர் பதி யருளிய மகள் தனை மருவிய.
கரவடி வழகிய சரவண குகப் பெரு (வர)

சரணம்.

பிறவி வேண்டிலேன் பெரும் நிதி வேண்டிலேன்
பெண்டு பிள்ளை யெனும் பேய்களை வேண்டிலேன்

அருமை சேர் புகழுறும் அறத்தை வேண்டினேன்
கரும மில்லாமலே கருணையா யாண்டிடும் (வர)
சித்திரக் காவடி செலுத்தியே மங்களம்
முத்திர மாதியி லோங்கி முழங்கிட
பக்தியாய்ச் சின்ன சாமியு மிங்கித
பாலகன் பாடிடும் பரமனின் குமரனே (வர)

39. இனியாகிலும் தயைசெய் என்றவர்ண மெட்டு.

இராகம் தேசிக தோடி. தாளம் ஆதி.

பல்லவி.

தோகை மயில் வாகன பால பலருமுயர்
வாக மகிழ் மோகன சீலா

அநுபல்லவி.

போக சுரேந்திரன் போற்றும் பழனி மலே
பாகனே—கன யோகனே வைபோகனே குகனே பசுந்
[தோகை

சரணம்.

நாற்புரம் மூர்த்தி ஸ்தானமும் அதனருகே
நந்த வனத்தின் வாசமும் கமழுகின்ற
பூத்தமல ரோடையும் அமராவதி
பொங்கி வழியும் ஜாடையும் நகர்தனிலே
சித்திரத் தேரின்வி சித்திரத்தை—என்ன சொல்வேன்
அருளாளரை
உத்திராப் பூசத்தில் எத்தனையோ விதம் விள் வேன்
முன்னால் பரத
நாட்டிய மாடிட வாத்திய கோஷமும் முழங்க
பின்னால் பஜனை
கோஷ்டிகள் காவடி மாகூிமை-யாக வே விளங்க
கிரியின் மீது
சத்தி வே லுடன் நித்யநேமமாய் சுப்ரதீபமாய் நின்ற
பெருமானே
பக்தி யாகவே நத்தி னேனுனை உத்தமாயெனைச் சண்டா
ளிடம் விடாமல்

பக்தன் சின்ன சாமி தூதிக்கும் பரம் பொருளாகியவா
வல்வினை போக்கியே வாரும் துயர் நீக்கியே
வருந்திய யென்னையாளவா சானகப்பசும். (தோஷக)

40. எப்போதானிறங்குமோ என்ற வர்ணமெட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

பல்லவி.

எந்தன் கலி தீரையா ஈராறு கையா—மெய்யா
எந்தன் கலி தீரையா.

அநுபல்லவி.

கந்தனே பழனிவாசா கானவர் புகழும் நேசா
காரையா பாரையா கருணை வைத்து நீரையா (எங்)

சரணம்.

அறுமுகனே குக அடியேன் துயர மிக
பரமேசனின் மகா பாலனை யருள் சுகா
சுரர் துதி ரக்ஷகா சுப்ரமண்ணியா ஜெக
சூரனே தீரனே சூக்ஷியருளும் வீரனே (எங்)

மாமயூர பாகா மவுனப்ரவாகா
சோமேசா யென்னைக்காவ தாமசமின்னமேனோ
பாமரன் சின்னசாமி பாடிடும் வண்ணநேமி
பாலனே சீலனே பக்தரநு கூலனே (எங்

41. மோகம் பொல்லாது என்ற வர்ணமெட்டு.

இராகம் காம்போதி தாளம் ஆதி.

பல்லவி.

ஆறு முகனே யென்னை யா ள வா குகனே
ஆறு முகனே ஈராறு கையனே குகனே (ஆறு

அநுபல்லவி.

சீறும் மயிலேறியே மாறுபடசுரரைத்
தாறுமாறுய்க்கிழித்து வேறுடனழித்திட்ட
வே ல னே சீலனே

சரணம்.

காலன் வராமலெனைக் காரும் நீருமைவிட
ஞாலமீதினிலிலே நாதனே வரமருள்
சோம சேகர ரருளிய பாலா
சூலா வடி வேலா யெனையாள இது கால முனை

நேமமுடனே உந்தன் நாமமுச்சரித்திட்டால்
பாவம் பறந்து ஜென்ம சாபல்ய மாகுமே.
பாலன் சின்னசாமி பாவலன் போற்றிடும்
பார்வதி சுதனே கூர்மலர்ப் பதனே

நேர்மதி முகனே நெடியமால் மருகா
கமலத்த வன்மகிழ் விமலச்செ யலுரை
கருவே திருவே மருவே குருவே
கண்மணியே நன்மணியே விண்மணியே பொன்மனியே
கானவர், துதி, முரு கானவ மோனவ
கா ல மா ன தே குகனே (ஆறு)

42. இராகம் சுருட்டி திருபுடை தாளம்.

கண்ணிகள்.

ஏதென் மீதினிலே வாது ஏற்குமோ உனக் கீது
சூதறியாப் பாலன் ஏதும் தோணேன் வகை காண ஓதும்
(ஏதென்)

மனைவி மக்களாசை பூணும் மாய்கையாலலைய லானேன்
கனவிற்கண்ட பொருள்போலே காணுவதருமை யானேன்
(ஏதென்)

சிவ சுப்பிரமண்ணிய தேவே செழுஞ்சுடரான கோவே
பவமதைத் தீர்த்தருள் வாயே பண்புடனே யென்னை நீயே
(ஏதென்)

ஆறுமுகப் பெரு மானே அடியே னிடரைத் தீர் கோனே
சீருடனே சின்ன சாமி செந்தமிழ்த் துதி நேமி
(ஏதென்)

43. கருவினுருவாகி என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

சிறுவயதிலே யான் செய்த கருமவினை போக்கவையா
புரிமுருகா வகை நீர் செய்ய வருவாயே.

பரவை சூழ் வடிவேனே குறமகள் மணவாளனே
பரம சற்குரு போதனே அருள்வாயே

நரகமதிலே பிறந்து பருவமதிலே தவிழ்ந்து
நடுவதனிலே அலைந்து துயராலே

சிரமமறவே நீர் கெதி சிறியன் சின்ன சாமித்துதி
கிருபை வை பழனிப்பதி முருகோனே.

44. மலடி வயிற்று மகன்போலே என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

மரகத மயிலிசை நடனசிகா சிவ
கிரிதனில் புவிமிசை வடிவழகா உனைக்
குருமுனி தொழவர மருளியமால் மருகோனே

அறுமுகனே யென் வறுமைதனைப் பார்
அகலுறவே நீர் புகலிடமே நான்
அவையடைந்தேன் உன் பதமதைத்தந்தாள் முருகோனே

சரவணபவனே சண்முகனே குக
முருகனே என்வினை வல்வினை யோ இது
சரி சரி உனைவிட எனக்கினி யார் சொலு மழகாமோ.

தருநிகர் கரமுள குண நேமி சிவ
குருவென துதிசொலும் சின்ன சாமி புகழ்
ததியிது கருணைவை யபிராமி சுகா மகிழ்வாலே.

45. கண்ணாயிரம் படைத்த என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

எண்ணாத யெண்ணமெல்லாம் எண்ணியெண்ணி நெஞ்சுருக
என்னிட விதிவச கன்மமு மிதுசெய லாச்சுதே உளம்
புண்பட வெந்து கரிந்து திடம்பறி போச்சுதே.

விண்ணாடு காவல்புரி பொன்னே மணியே யுனக்
கெண்ணிடி லோமலே நண்ணிய யீதொரு சூக்ஷமே எனை
மன்னியும் வல்வினை பின்னிட வைக டாக்ஷமே.

கொஞ்சமே னுமுனது நெஞ்ச மிரங்க லையோ
குக்குட சக்கர மிக்கவே நற்குக பாலனே நான்
எத்தனை நத்திய ழைக்கினும் முத்தம சீலனே.

தஞ்சமெ ன்றே யுனை செஞ்சொற் சின்ன சாமியும்
சாடிடு மே துதி பாடிட வேபுக ழாடியும் வினை
யோடிட வே பறந் தேகிட வாயெனைத் தேடியும்

46. இசைந்த யேறும் என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

குறித்த நாளு மிடர் மிக வுடல் மெலி வானதே—உந்தன்
குளிர்ந்தசெந்தா மரைமலர் போல முகம் காணமல்

தரித்திரம் வேய் தங்கிய கொடிநோய் பிணியாலே—நான்
பெருத்த வாதனை படுமெனக் கருளுவாய் துணிவாக

விரிந்த மார்பும் பரந்த தோளுடன் வடிவேலா—உந்தன்
வேலுட னடமிடு மாமயிலே றிவா யெனையாள

உகந்து வாதிடும் ஒப்பணை சேயெனும் சின்னசாமி—துதி
பரிந்து செய்திடும் மழகிய தெண்டா யுதபாணி.

47. வாங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

தெண்டா யுதா முருகா வண்டோடும் தோளசைய
மிண்டான பாதகரைச் செண்டாடிய குகனே
மந்தாரை வாச முள மார்பும் முக மேநிற்மும்
பலகாலே

கொண்டாடி னேனுந்தனை வந்தாண்டிடு மே யெந்தனைச்
சண்டனணு காமலெனைச் சண்முகாயெந் தன் வினையை
பஞ்சாய்ப் பறந்த கல பார்வதி சு தா வருக
மகிழ்வாலே

கந்தனே பழனிமலே காரணுவே லாயுதனே
சிந்தாக் கிரந்தனுகித் திருமெந்த னிடரகல
சம்போச ரவணனே பர சாம்பசிவ னருள் குமரா
அருள்வாயே

மைந்தன்சி ன்னசாமி துதி செந்தமிழா லேவருதி
ருத்ராக்ஷ மாலேயொடு நீறணியும் மார்பழக
பக்தர்களைக் கார்க்கும் திரு மால் மருகா நீயெந்தன்முன்
வருவாயே.

48. நாளிலே நான் கண்ட கனு என்ற மெட்டு.

கண்ணிகள்.

கண்ணுடி போல் விளங்கும் கடவுளே யுன்னேக் காணு
தெண்ணுது எண்ணி மனம் புண்ணுகினேன்
முன்னுளில் என்ன செய்தேனே இன்னுளில் வந்து முடிய
முருகோனே சம்மதமோ உன்மனமே
காரண சூரரிடம் கடுஞ்சமரே புரியும்
வீரனே என்னிடம் போர் புரிய லா மோ
பாரணே செய் சின்னசாமி சீருடனே துதிநேமி
கூர்ம யூர வாகனு கொண்டாளுவாய்

49. இராகம் தேசிகா தோடி தாளம் ஆதி.

கண்ணிகள்.

பூதலத்தி லேதிருந்த சேதனத்தி லேவுயர்ந்த [சாமி
மாதவத்தி லேமிகுந்த சாதுவர்க்க மேயுகந்த சாமி
நான் நாதனற்ற கோதையாக ஏதுமற்ற பாவியானேன்
சூத கற்றும் பால னுக நேமி—நேமி
சூதறிந்த பாலனே சூரரையும் மாளவே [செய்த
கூருடைய வேலினுல் கோலா கலமாகவே செய்த
உன் சூக்ஷிகள னேகமே தாஷ்டிக மதாகவே [ன்
வாட்டிடுமெ பாரமே யான் னுய்வேன உய்வே
வானவர்க்குரு வானவா இருள் கானகக் குற
மானினே பத மோக முற்றிடும் பாதனே என்
சோக மற்றிடும் நீதனே யென் கோரய் நோரய்

நீ நானெனுமகங் காரமே செய் தேனிலே மனதா
ரவே பொறுத் தாளவே
சிங் காரனே நீ வாராய்—வாராய்

சத்தியிட பாலனே பக்தன் சின்னசாமியும்
மிக்க வண்ணம் பாடவே நற் கெதிய தாகவே தாரும்தாரும்

ஓ உத்தம வேல்சீலனேநா னெப்பிழை செய்போதினும்
நத்தியெனை யாளவே முன் வாரும் வாரும்

50. பொன்னுலவு சென்னிகுள என்ற மெட்டு

கண்ணிகள்.

கந்தனேநா னெந்த விதம் பந்தமிலா துந்தனையே
காணுவப்பொழு தென்றறி கிலேன் பதம்
பூணுவ தெப்படியும் தெரி கிலேன் ஜெகத்
காரண உனது பரி பூரணம னது கந்து
காக்ஷி கொடுக்கும் சமயம் சொல்லையா எனை
ரக்ஷி யருள மன மும் வல்லையா

அந்தகன்வந் தெந்தனையே தொந்தரவு தந்திடாமல்
ஆதரித் தருள் தந்திட வேணுமே குகா
வேறொ ருத்தருனை விட நாணுமே அ
நாதையாகிய பேதையேனிட தாதையாகிய நீதனேஉன்
அன்புடன் எந்தன் துயர் தீருமே பல
வெம்பிணி தீர்த்தெந்தனை நீர் காருமே

வஞ்சி குற மாது பங்கா கொஞ்சமேனும் நெஞ்சிரங்கா
துந் தன்மனம் கல்லிரும்போ காணனே உனை
சிந் தையில் நி னைந்துருக லானனே உந்தன்
மந்திரப் பொருளாகிய ஐந்தெழுத்தை ஓதிவைத்தால்
வந் தனைவழிபா டுடன் பூசிப்பேன் சிவ
கந் தவேள் குக னே யென்று நேசிப்பேன்

குஞ்சரி மணவாளனே தஞ்சம் சின்ன சாமியுனக்
கஞ் சியே துதிசெய் திடும் வேலனே உனை
அஞ் சலென்றோரைக் கார்த்திடும் சீலனே நான்

கோரிய வரங்கள் தாரும் கூறு மெந்தன் குறைதீரும்
கோல மாமயில மீதி னி லேறியே இந்த
வேளை தன்னி லெந் தனையே பாருமே.

51. பூமி மெச்சிடும் என்ற வர்ண மெட்டு.

கண்ணிகள்.

1 வேலா வேலா யென்னை யாள ஆள இது
காலமே ஞாலமீ தினி லனு கூல னே—மிக
வெய்ய மாரியி லா ளையும் பயிர் தனைப் போல

2 யாலக னிழந்த பாவை போலும் நொந்த [வே
பாவியே யெனதா வியே யுனை மேவியே நாளாய்ப்
பஞ்சு கார்த்த கிளி நெஞ்சுல ர்ந்தது போல ஆனதே

3 கோவதை கள் செய்து குருத்துரோகியா யிக மானனே
கொலை ஈனனே மகிழ்மோ னனே எந்த
குற்றம் செய்திருப்பின் வைத்தருள் வாயற்ப மாகவே

4 பாவலன் துதி சின்ன சாமியும் கவிவண்ணம்
பாடிட புகழாடிட உனைத் தேடிட சிவ
பார்வதியருள் கண்யா நேர்மையாக என்னை யாளுவாய்

52. செந்தின்மா நகரந்தனில் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 குன்றின் மேவிய கந்தனே யுன்னருள்
தந்திடுவா யென நம்பியே நான்
சிந்தை துய ரெய்தி வெம்பினேன் உனைக்

கொஞ்சிக் கோதிடும் வஞ்சிமா தெனும்
குஞ்சரி மகிழ் பஞ்சணை சுக
மின்பசாரமும் பருகிடும் வேலனே
எந்தனை யாளவும் பாரமோ . உமை
மைந்தா வுனக்குப காரமே

2 தென்றல் வீசிட உந்தன் மேல் மையலும்
எந்தனைச் சோர்ந்திடச் செய்யுதே பெரும்
புண்பட வேமனம் நையுதே வெகு

தீவிரம் செயும் மாரன்வா தையை
ஆவலுட னேகச் செய்வாய்
செஞ்சுடரான அஞ்சுகமே உந்தன்
சிற்சுகமே தந்து காருமே மனம்
ஒப்பிட வே யெனைப் பாருமே

3 சந்திர னில்லா வானம் போ லாகவே
தான்மயங் கிடவும் ஞாயமோ நீரும்
ஏனிந்த விதம்செய் யுபாயமோ இந்திர
ஜாலனே ஜெய சீலனேயநு கூலனே
வடி வேலனே சிவ

சங்கரற் குப தேசம ருளிய
சங்கதி சொல்லிட லாகாதோ எந்தன்
சிந்தை வாடி மனம் வேகுதே

4 இந்திர லோகமும் உந்தனைக் கண்டிட
ஏங்கித் துடித்திடும ஐயனே உயிர்
வாங்கப் பதைத்திடும் மெய்யனே பல
இங்கிதத் துதி சின்ன சாமியும்
பொங்கும் வண்ணமும் சிந்து பாடிட

கந்தர்வரிஷி கேஸ்வரர் போற்றிடும்
காரண சூரரை மாய்த்தவா வினை
வேருடன் போக்கடித் தாளவா.

53. நின்னு நம்மி உன்னவாடுரா என்ற மெட்டு.

இராகம் கமாஸ் ரூபக தாளம்.

பல்லவி.

கொஞ்ச மேனும் நெஞ்ச மிரங்கலையே. வேலா
குமரனே யுனதுளம் நோகவே
அடியெனும் பாதகம் செய்தனோ (கொஞ்)

அநுபல்லவி.

தஞ்ச மென்றே நம்பி னேனே
வஞ்சகச் செயல் தனை செய்திட
சிந்தை யுவந்ததோ கந்தனே (கொ)

சரணம்.

தன்யனாக எண்ணினேனே
குன்றிட வைத்தாய் சிவமே

சின்னசாமி பண்ணால் நேமி
சிகிமீதினில் பவனி வரும்
முருகா நான் பணிவே னினி. (கொஞ்)

54 மருகேலரா என்ற வர்ன மெட்டு.

இராகம் காப்பி ரூபகதாளம்.

பல்லவி.

கருணாநிதே சரணாகதியே

அனு பல்லவி.

அறுமுகனே கிரிகுகனே
வரம்தா பழனா புரியப்பதியே (கரு)

சரணம்.

மனமேயெறிந்து கனமே குறைந்து
பிணியால் முடங்கி நினைவே யடங்கி
குணமேயுன்பாதம் நினைந்திடுவோர்க்குன்
னருங்காக்ஷிதாரும் பெரும் மாக்ஷிமை வாரும் (கரு)

குஞ்சரி பாகா குறவள்ளியின் மோகா
அஞ்சலி செய்தேன் அடியேனைப்பாராய்
மைந்தன் சின்னசாமி மகிழும் குணநேமி
உந்தன் பாதம் தர இந்த வேளை வாரும். (கரு)

55 மன்னா உன் மீதில்மிக என்ற வர்ன மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்.

பல்லவி.

வர்ண மயிலேறி வந்தருள் வையே
வந்தருள் வையே கந்தனேயுன
தன் பெனக்கினி தந்தருளிட . (வர்)

அனு பல்லவி.

சொர்ணப்பசுங்கிளியே தோகைமயில்வாகனனே
வன்னத்தினைமாவை வாங்கியேயருந்திட்டோனே
அன்பாய் வரந்தருவாய் ஆறுமுகனே (அன்பா)

ஆறுமுகனே கோறுமெந்தனே
பாரும் வினையைத் தீருமினியே (வர்ண)

சரணம்.

நாயகமே தாயகமே நானுன்மேல் ஞாபகமே
தூயனே யென்னுவல்லனேத் தீரும் வழி தேடுவையே
சேயன் சின்னசாமி செய்யும் துதியால் (சேயன்)
செய்யும் துதியே வையாபுரியே
நையுமெந்தனைக் கையும்விடாதே நீர் (வர்ண)

56 இராகம் இந்துஸ்தான் பியாக்கு ஆதி தாளம்.

பல்லவி.

அகலும் நாளெதுவோ காணேன்—அகலும்
நாளெது காணேன் நாதனே தோணேன்
நீதனே யென்னிட வாதெனும் வல்வினை (அகலும்

அனு பல்லவி.

பகலிலு மிரவிலும் படுமன வேதனே
புகலிட உனதகம் கடிமன சோதனே
பார்ப்பது மழகோ தீர்ப்பது முறையே
கார்ப்பதுன்கடனே கந்தனே யென்துய(ரகலும்)

சரணம்.

கல்லோ மனமிரும்போ காக்க யெனைவிரும்பே
கதிசத்தி யெந்தனே நத்தியழைத்தே னுனைக்
காலம்—துயரறும் வேளை—புரைக்க மிக
ஜாலம்-ஆகாதேசொலும் வேலா—மனதிரங்கி
வா வா வா வா வராவிட்டால்
சாவேன்—சாவேன் நிச்சயமானல்
பாவம்—பாவம் உந்தனுக்கு
ஆகும்—ஆகும் சேராவண்ணம்
சொந்தமா யென்னிடம் சந்தனே முந்தியே
சொல்—சொல்—சொல் கோடி கோடியாய்
சுந்திரா உந்தனுக் கென்னிட வந்தனம்
கொள்—கொள் கொள் கண்ணே ரசமே
இன்பமாயச்சின்னசாமி ஏற்றும் துதிநேமி
பண்புடன் அந்தர் யாமி பாவை வள்ளியின் காமி

பரிவுடனுனதக மிளகியென் தீவினை
கரிமுக னிளையவா கழுமலை தேவனே
பார்க்கவும் வல்லையோ தீர்க்கவும் தொல்லையோ
கேட்கவும் சள்ளையோ ஏற்குமோ எனதிட (ரகனு)

57 பருவகாலத்தில் வீணாய் என்ற வர்ன மெட்டு

இராகம் தந்நியாசி தாளம் ஆதி.

பல்லவி.

மகத்துவ முள்ள தெய்வம் ஜெகத்தினிலிவர் செய்யும்
மாயம் என்னென்ன சகாயம்

அநு பல்லவி.

அகத்திலும் புறத்திலும் அரும்பிலும் துரும்பிலும்
ஆனந்தமாய் வசிக்கும் அருமைசேர் மணியனே ()

சரணம்.

ஐந்தெழுத் தோதினால் அவர் பொருட்டே செல்வம்
தந்திடுமாகையால் தர்ம மீட்டே நலம்
வந்திடுமோக்ஷ மகிழ்ந்து கடாக்ஷமும் மேலே
அருளுவார்ப
ஞ்சாக்ஷரமகிமைய பேக்ஷி பவர்க்கநு கூல
னாகவருவார்
மந்திரநீறதை வந்தனை செய்தணிவோர்க்கு
தாதனுண்டியாய்
குந்திடும் சேயெனும் கோவண மோடு முவந்து
காக்ஷிதருவார்
மைந்தன் சின்னசாமி வருந்தும் துதி நேமி
செந்தின் னகரம்தன்னில் சேவைதரும் வேலனே (மக)

58 தாயே நான் போய் வருகிறேன் என்ற மெட்டு.

இராகம் கேதார கௌளம் அடதாளம்.

பல்லவி.

யாருக்குத்தான் தெரியும் உன்மகிமை
யாருக்குத்தான் தெரியும்

அனு பல்லவி.

நீருக்குள் குமிழிபோல் நேர்மனை தீபம்போல்
ஊருக்குள் மலர்போல் நாட்டில் கலந்த வேலா (யாரு

சரணம்.

எள்ளுக்குள் எண்ணையைப்போல் எங்கும் நிறைந்த ஈசா
கல்லினிற் பாசிபோல் கலந்து மகிழும் நேசா
சொல்லுக்குள் சின்னசாமி துதிக்கும் சிவகாமி
பல்லுயிரனைத்துமே பாது காப்பவள் பாலா
பரம புருஷா வரதநயனா
வளரும் பழனி புரியப்பதியே
பாலனென்வினை தீர்த்தருளிடும்
கோலமாமயி லேறும் வேலா(யாரு)

59 மயங்கி நிற்காதே என்ற வர்ன மெட்டு.

இராகம் கல்யாணி ரூபக தாளம்

பல்லவி.

மனதிரங்க விலையோ வேலா
மனதிரங்க விலையோ
மரகத நவமணி மின்னே
அருளது புரிந்திட இன்னம் (மனதி)

அனு பல்லவி.

எனதுடலாவியை ஈந்தேன் நீரும் பெற்று
உனதுடலாவியை உகந்துதாரும சற்று
முனதுளமகிழ் வரம் தாநகவே
குணஹுண சரவண பவனே (மன)

சரணம்.

எட்டாத கொம்பி லிருக்கும் கனியதை
தட்டாத முடவன் தானருந்துவதை
யெட்டாகும் மதைபோல் உந்தன் தெரிசனம்
கிட்டாத பாவியாய் கொட்டாவி விட்டேனான்
சட்குண யானுனை நம்பியே
பறபல மாய்கையால் வெம்பினேன்
சரணம் சரணம் சின்ன
சாமி துதி வேலா யினம். (மன)

60 இராகம் எதுகுலக்காம்போதி.

திருபுடைத்தாளம்.

கண்ணிகள்.

நாதனே யுன்னைவிட ஆதரிப்பா ராருமிலே
வேதனே நீரும் என்னை வேலா கைவிடாதீர் சொன்னேன்
பாதமே கெதியதாக பணிந்து நின்றே னேமிக
வாதுகள் புரிய லாகா வந்கருள் செய்வீ ராக. (நா)

வாசவலர்ச் சூடும்தாரா மகிஷ மீதேறி நேராய்
பாசத்துடனினி வாரா வர மெனக்கருளும் சீராய் (நா)

தாசன் சின்னசாமி துதி தங்கும் பழனிபுரிப்பதி
நேசனே எந்தன்மே லினி நேசித்தாள்வதுன் கடனே (நா)

61 இராகம் முகாரி ரூபக தாளம்.

பல்லவி.

எப்போதான் கொடுத்திடுவாய்
ஈசா, பரமேசா கருணேசா புகல்னின்வரமும் (எ)

அனுபல்லவி.

தப்பும் தாறுமாறுய்ச் சண்முகா எனது
ஒப்பணைபோலவே உளறினே னகமகிழ்ந் தினிவரம்

சரணம்.

எங்கும் நிறைந்திட்ட ஈராறு கையனே
இதுவரை நீர்பார்த்திரு ந்தது மெய்யனே
பொங்கும பழனிமலே வாழும் துய்யனே
பொறுத்திட இனி என்று லாகாது ஐயனே
புகழ்த்துதி சின்னசாமியும் தமிழ்க்கவி வண்ணம்பாடிட
போகயோக மாகூதிமையை தோகைமயில் காகூதியுடன் (எ

62 மந்தகாமனின்னேசதா என்ற வர்ன மெட்டு.

இராகம். முகாரி தாளம் ஆதி.

பல்லவி.

மந்தகாசனேவா வடிவேலனே சிவா (மந்த)

அனு பல்லவி.

கந்தனே உனது சுவை கான் முனையானருந்த
சுந்தரா யென்னையுவந்துன் சுடரொளியைத் தருக. (மந்த

சரணம்.

அத்திமுகனிளையா நத்தினேனேமலையாய்
சித்தமது கலைய வைத்தது யார் சொலையா
எத்திசையும் புகழும் ஈசா தொழுதே னிதம்
கத்தினேகுருதி கக்கிடவே வருதி
காரிளம் தோகையை மாலையும் சூடின
கரனக வேடனே யானொரு சீடனே
நேரிதமாகவே கோரிய என்வினை
யேகிடும் வழியதைத் தேடிடும் வேலனே
நாடிய சின்னசாமி பாடிடும் தெண்டபாணி
வாடிய எனைக்கார்த்திட மாமயில் சிகைமீ தினிலே(ம)

63 விதியாலே நொந்து வாடலானேன் என்ற வர்ன மெட்டு

இராகம். தேசிக முகாரி தாளம் ஆதி.

பல்லவி.

கதிதாரும் வேறொருவராரு மிலை வேலா பர
கதிதாரும் வேறொருவ ராருமிலை.

அனு பல்லவி.

உதிர்சரகது போல் உலர்ந்து வாடின என்னை
சதிசெய்ய நினைப்பது சரியல்ல உனைவிட—பர (கதி)

சரணம்.

புகழாயிருந்த என்னை இகழவைத்தாயே
புண்ணியா முறையோ உன் கண்ணியக் குறைவே
மகவுமனையுடனே வாழ்வுகள் செழித்தும்
மங்கள மாகவே தங்கி யிருந்திட
தந்திடு முன்னருள் எம்பெரு மானே வீர்
அதன்பின்னரே.
இங்கித ஞானமு வந்திடும் சாதுகள்
வந்திடு மேன்மைம கிழ்ந்திட தான தர்மம்
செய்து சுகிக்க
நல்வழி காட்டி அல்லலைவாட்டி
நமனினையணுகா திருந்திட வோட்டி

சொல்லும் சின்னசாமி துதித்திடும் வேலனே
தொல்வினை நீக்கிட தாயனே உனைவிட பர. (கதி)

64 மரியா காதுரா என்ற வர்ன மெட்டு.

இராகம். சங்கராபரணம் தாளம் ஆதி.

பல்லவி.

குணமே உல்லாச குணமே

அனு பலலவி.

கனியோ ரசமோ
கற்கண்டோ சர்க்கரையோ

மனமகிழ்ந்தழகியே மாமயிலேறிடும்
குணஹண சரவண பவனருளிடும் பெருங் (குண)

சரணம்.

கலியுக மகிமையு முன்னிடமே உந்தன்
கருணையைக் கொடுத்திடு மென்னிடமே எந்தன்

சலிகையைத் தருகுவேன் உன்னிடமே உந்தன்
சாரத்தைத் தந்திடும் என்னிடமே

பல பல கிறமுள வடிவழகா உனைத்
தொழுபவர்க் குனதருள ருளியவா

பாலன் சின்னசாமி பாடிடவே நீர்
பார்த்தக மகிழ்கொண் டாடிடவே

சீலமாய்த் துதித்தேன்
சீக்கிரம்வா எனையாள

வளர் துர கத ஜெய வடிவேலா நின்
னிள கிய மன துட னெனை யாளும் பெரும். (குண)

65 அம்பிகா உன்மகன் குகன் என்ற மெட்டு.

இராகம். தேசிக தோடி எகதாளம்.

பல்லவி.

சங்கீத ஒய்யார தீரா மங்கை தெய்வானையின் மரார்-
பரட—சச்சிதா நந்தனே உச்சித கந்தனே (சங்கீ)

அநுபல்லவி)

சிங்காரவேல் முருகா சங்கரனீ தென்பழனி வாழ் பிரியா ன் தருளும்
சண்முக வேலனே எந்தனை யாளும் நீ (சங்கீ)

கச்சியப்பன் குறைய மெச்சியே சொர்ப்பனத்தில் நிறைய புலவர் போற்றி
சாற்ற வரங்கு ஏற்றும் துலங்க (சங்கீ)

காதில் குண்டலமொடு மீதில்மணி கழுத்தில் ருத்ர மாலை முடி மகுடம்
விளங்க புனைந்த குழந்தை வரந்தா (சங்கீ)

சாம்பலணிந்த மேனி சார்ந்தொளி மார்பில் கடம்பமணி வீச சின்ன
சாமிதொழு திடும் வேலா கதிதரும் (சங்கீ)

66 தாரான போலு த்ரா என்ற வர்ன மெட்டு.

இராகம் தேசிக தோடி தாளம் ஆதி.

பல்லவி.

வேலனே கதி தாரும்

அநுபல்லவி.

சீல முடன் வாரும் கோல மயி லேறி (வேல)

சரணம்.

கதிர்வடி யுற்ற தங்கம் காரண சூரரை கருணையுள்ள ராஜ சிங்கம் போரில் மடித்திட்ட
வீரனே உந்தனை நாவில் துதித்திட்டேன் (வே)

தொகையுறு.

பாரிலுள கவிஞர்கள் பண்பரங் பண்ணிசையும் செய்யுளை கேற்றும் வகைபோல்
நேர்மையாய் என் குறையை நீக்கி முருகையனே நின் கடாக்ஷம் தருகுவாய்

எடுப்பு.

செங்கரத்தில் வேல் துலங்க சிரத்தில் முடிவிளங்க
சீர்த்தி யுடன் சின்ன சாமி
போற்றி மகிழும் வண்ண கேமி. (வே)

67 விருத்தம்.

எங்கு நீ சென்றையோ எவ்விடம் — கந்தவேள் குகனே நான் கண்டறிகுவேன்
இரவு பகலாயுன்னை இளகவில்லை — எத்தனை வருந்தியும் புந்தனுக்கு
தெங்குமா கதலிபல சிறப்பாய் — தேனுடன் கனிவகை படைக்க வறியேன்
தேர்ந்தெடும் மல்லிகை தெருள் கடம் — முல்லை ரோஜா வுடன் சூட்ட வரியேன்
குங்குமம் கஸ்தூரி குறுவெளா — ஜவ்வாது புனுகுடன் சாற்ற வறியேன்
கோத்தூற் பவளமும் சுணமுடன் — மணிமாலை சரிகையும் சாற்ற வறியேன்
பொங்கிடும் சின்னசாமித் புகல் மானசம் — துதியும் மாலையை செய்தனன்
புகழுடன் ஏற்றுமிக புரத்தென் — சிகியினிற் காற்றுபோல் வினை தீர்த்தருள் வையே.

68. செத்தியில் வாழ்குருவே என்ற மெட்டு.

இராகம் தேசிக தோடி தாளம் ரூபகம்.

பல்லவி.

திருச் செந்தூர் வாழ் — ஷண்முகா உர்தன்
சேவைகாண — ஆவலாகி
பாவியானேன் — தேவனே திருச் (செந்)

அநுபல்லவி.

கரியின் முகமும் — உருவம் தரியும்
அருக னுடனே — பிறவி முருகா
காணகத்தி லேகுறத்தி — மேவிரத்தி யேவனப்பை
கண்டு தொண்டு — கொண்டு நின்ற
கமல சுவடு — புரியவா திருச் (செந்)

சரணம்.

ஊனுறக்க — மேதுமிலா
தோதி நத்தி — னே னே தினம்
நாமெடுத்த — ஜென்ம சாபம்
நாடும் துன்பம் — கூடும் பாவம்

நாதனே யகற்றிடும் — மெய்ஞ்
ஞானமே புகட்டிடும் — அருள்
சீலனே துதி சாற்றினேன் — வடி
வேலனே யரங்கேற்றிடும்

நஞ்சு திங்கள் — தும்பை கொன்றை
வஞ்சி தங்கு — செம்ம லீன்ற
நாத வடி வேலுடையா — சேவல் கொடி யேயுடையா
திருவின் மருகா — உனையே வருதி.
குருவே மருவே — கனவி லுருகி
சின்னசாமி யேதுதிக்கும் — வண்ணநேமியே பதத்தை
சிந்தை வந்து — கந்து தாரும்
சிகியின் மீதிலமர்ந் — திடும் (திருச்செந்)

69. இராகம். செஞ்சுருட்டி ரூபக தாளம்.

பல்லவி.

பழநி — புரியே

அனுபல்லவி.

பழநி புரிகிரிமுருகா — குழகன் அரிதிருமருகா
பரமனே அரகர சிவனே — சரவண பவ ஷண்முகனே
பண்டிந்தன் றன்கஞ்சன் — கண்டின்பம் தங்கும் புகழ்
பரிவுடனழகினி லொயிலாய் மரகத மயில் மிசை நடமிடும்

சரணம் [பழ

கருமலை யாண்டிடும் ராயா
கானகத்தே னுண்ட வாயா
சிறு மியைச் — சிறை கொண்டநேயா
சின்னசாமி — கவிச்சகாயா

தந்தனத் தோம் — தரிகிடத்தோம்
தரிகிட கிட — திமிதகத் தோம் [தோம்
தரி கிட கிடதகதிமிதக — ததிங்கணத்தோம் ததிங்கணத்
ததிங்கணத் தோ மென்றுடிய — சங்கரனின் மைந்தனே நீ
பந்தபாச மேதும்வரா — எந்தனையு வந்து காரும்
தர்க்கித்தவ — ரக்கர்ச்சிறை
வைத்துக்குக — மிக்கப்புகழ் [நத்தினேன்

பெற்றிடும்—அந்தனே—சுத்தனே—பக்தனே—உத்தமா—

பர-சிவ-மகி-முமை எழிர்-வளர்
கர-வடி வழ கனே அருள் தரும் (பழ)

70. இராகம் தேசிக தோடி தாளம் ஆதி.

பல்லவி.

கருணை கரனே கன
யோஜித பூஜித சூசித தேசிக (கருணை)

அனு பல்லவி.

தரு நிகர் கர முள அறுமுகனே யுன்
தாளிணை யானித மேனிணை வாகினேன்
தருவாய் வரம் புரிவாய் எனக்
கினிதாய் பதம் அருள்வாய் மகிழ்
தயவுட ன்டியெனை ததியிது கார்த்திடும்
மயல்வில கிடவரு முயல்கதி தீர்த்திடும். (கருணை

சரணம்.

பரவை சூழுலகினில் பழனிமலைவாசனே
சரண டைந் தோர்களுக் கருள் தரும் யீசனே
சிறியன் சின்னசாமி வருந்தும் துதி நேசனே
கிருபை சுரந்தெனக் கிதம் தரும் ப்ரகாசனே
சிவ குரு வென துதி சொலும் சுர ரமுர் தமே.
தேனினு மேயினி தாகிடும் தேவியின்
திருவே குழல் மருவே இதழ் அருவே இளம் பருவ மிக
அரிவப ரிருவரின் சுகமதை பருகிடும்
வரதனே குமரனே துயரதை யகற்றிடும் (கருணை)

71. இராகம். கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி.

• பாலபிஷேகப் பிரியா சுக
பரிமள-மிகுபுகழ் நறுமலர்-மதுவுடன்
பஞ்சாமிர்தம் கமழ் கந்தம் களபமுயர்
குங்கும கஸ்தூரி கோங்கிள நீருடன் (பால)

அனு பல்லவி.

மேலவர்க்கோனீன்ற சீலியைததழுவிய
மெய்யப்பரங்குன்றினின் மேவும் குமரனே

மெய்ப்பொருளாகிய முச்சுட ரேயுனை
கைத்தொழு தேனிதம் வைத்தருள்வாய் மனம்
மேவியே ஆவியே கோவையே பாவியின்
வேதனை யகற்றியே சேதன முயர்த்தியே
வினை தவிர்த்தருள்குக சரவண பவனே
வேண்டிடுமெந்தனை யாண்டிடும் கபிலையின் (பால)

சரணம்.

வேதனிடமிருந்து விளங்கிடும் கனியதை
காதலாய்ப்பெருகவே கருணைமிகுந்த கோவே
மாதவம் புரிந்துன்னை மகிழும் சின்னசாமி
பேதமையகற்றிட பிரியகுண நேமி
விரைவுடன்—சிகியினில்—நொடிதனில்—புவிதனை
வேலும் சக்தியுடன் சீல பக்திகுண
ஞாலம் சுற்றிவர நாழி சற்று முனம்
அத்தனும் விக்கினன் கைத்தலம் நத்தியே
ஆதி யனாதியே ஜோதியே நீதியும்
அருளது தந்திட சினமது பொங்கிட
அரைக்ஷண மாகிலும் தரைத்தல மீதினில்
தாதையின் தரிசனம் தீருள தேயென
மேதினி மேல்சுக மே பழனபுரி
அத்தர் பனிநீர் புனுகு ஜவ்வாதுடன் பச்சைக் கனிவகை
பழரச மோடுடன் (பால)

72. இராகம் தேசிக தோடி ஏகதாளம்.

பல்லவி.

கணபதியினுடன் துணைவா
துணைவா யுனையே குணமாய்ப் பணிந்தேன் (கண)

அநுபல்லவி

கணபதியினுடன் துணைவா மனமகிழ்ந்திடு மென்னிடமே
உளவினையு மகன்றிடவே க்ஷணப் பொழுதில் வரம்புரி
வாய்
புரிவாய் தருவே வடிவேல் முருகா (கண)

தொகையறு.

சரவணப் பொய்கையில் பரமனின் னருளில்தன்
சாயையால் வந்தபாலா

குருமுனிக் கருள்தனைப் பிரியமாம் விரயமாய்
சோவையே தந்த சீலா

எடுப்பு.

தக்கனிட வெள்வியை தவிர்த்திடும் வேலனே
பக்குவ சூரருயிர் பறித்திடும் காலனே
காலனே யனுகூலனே
கந்தனே சுந்தரா பந்தமும் எந்தனை
வந்துமே தொந்தரை தந்திடா துன்னருள்
தாருமே எனைப் பாருமே
தாக்கும் பிணி போக்கும் குண
மாக்கும் மனம் தேக்கும் ஞான
தேசிகா மனு பூஜிதா
தஞ்சம் மைந்தன்
நெஞ்சம் நைந்து
கெஞ்சி உந்தன்
அஞ்சல் வந்தேன்
ஊர்ஜிதா சம யோர்ஜிதா
நாவலன் சின்ன சாமியும்
பாவினில் துதித் தேமியும்
மேவியே யுனே நேமியும்
கோவை வள்ளியின் காமியும்
நயன வரத சுகுண குமரா (கண)

73. சித்ர ரத்ன மாளிகையில் என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஏகம்.

பல்லவி.

தங்கமே உன்னங்கமெல்லாம் நொந்து வாடுதோ ராஜ
சிங்கமே உந்தனைக் காண நெஞ்சம நாடுதே இந்தத்
தரணி முழுதும் பவனி சுற்றித் (தங்க)

அநுபல்லவி.

திங்கள் சடை சங்கரனும் ஈன்றளித்தவா சிவ
மங்கையுமா தேவி மகிழாய் வளர்த்தவா
சீலனே வடி வேலனே அருள்
சீர்த்தி மிகும் கீர்த்தியே யுன்
சிறியேன் வறியேன் சரணம் சரணம் (தங்க)

சரணம். (தொகையரு)

ஆண்டவா உன்னை நான் அஞ்சலி செய்வது
அரன் மகா மிகவும் முனிவோ
தாண்டவ மாடியே தஞ்சமென்றே னுனது
தாளினைத் தருகும கனியே

பாட்டு.

குங்கும மணிந்திடும் குஞ்சரி பாகா மதி
புங்கவர் முனிவர் போற்றும் பூசுர யோகா
சீருடன் துதி கூறிடும் தமிழ்
சின்னசாமி பண்ணும் நேமி
சிறுவா வரமே புரிய தருணம் (தங்)

74. கலியாணம் செய்துவையுமே—என்ற மெட்டு

இராகம்-பியாக்கு. தாளம்-ஆதி.

பல்லவி.

தேவர் சேனாதிபனே நற்றெள்ளமுதே
வானுள்ளளவும நேர் காவல் புரிபவனே (தே).

அநுபல்லவி.

சேவல் கொடியோனே செந்தியில் வாழ்வோனே
பாவலன் சின்னசாமி பாடிடும் முருகோனே
செப்பவும் அரமுனே இப்புவி தனில்விட
ஒப்பிட லாகுமோ உத்தம ரேயிலே
தேடும் புனமதை நாடும் குணமதை
கூடும் பரமனே ஆளும் சிவகிரி (தே)

சரணம். (தொகையரு)

தூய வெண்ணீறுடன் தோகைமயி லேறிடும்
தோன்றலே என் கடவுளே
ஐயனே வினையினால் ஆகுலத்தே படும்
அடியனுக் கிதமும் அருளே

பாட்டு.

வையகத்தோர் துதி வழங்கிடும் மெய்யனே
மெய்யகத் தோடுடன் விளங்கினேன் உந்தனே
வெம்பினேன் பிணியதால் நம்பினேன் உந்தனே
உம்பர் தொழுதிடும் செம்பொற் பாதமும்
வேண்டும் வரமதை ஈண்டும் கருணையாய்
வெருளுட னிருமெனக் கருளுவாய் சிவகுக (தே)

75. திருநல்லூர்க் கார்த்திகைதீபம் என்ற மெட்டு

இராகம்-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

பரமசிவனின் குருவே புவி
படைத்திடு வனைச்சிறை விடுத்திடும் தேவர்க் குறை
முடித்திடு மவுணரை மடித்திடு முருவே (பரம)

அநுபல்லவி.

மறைபுகழ் மாதியை அரன்செவிக் கோதியே
மணிமகுடம் புனைந் திருப்பிடப் பீடம்
தரைத்தல மதிலிவன் தாதையின் பதியென
உரைத்திடு வோர்க்கருள் நிறைத்திடும் குருவே (பரம)

சரணம்.

உம்பர் தொழுதிடும் உடுப்பி சுப்ரமண்யா
கம்பின யெந்தனை நடத்த முயலும் கண்மணியா
வன்பிணி நீக்கியே வல்வினை போக்கியே
வருந்திடா தேக்கியே திருந்திடக் காக்கவே
ஊழ்வினையால் மனம் தாழ்ந்திட லாகினேன்
மேல் செய வீடென கோள் சொலு வாரிலை
உத்தம பற்குணன் மைத்துனன் மெச்சிடும்
சித்தம கத்தினில் நற்குணம் வைத்திடும்
உருவா யமர்ந்திடும் திருவாய் மலர்ந்திடும்
மருவே செறிந்திடும் சுருளேவிளங்கிடும்
மருகா முருகா வடிவேல் குமரா
உனையே தினமும் நினைவே மனமும்
ஓதிடும் சின்னசாமி ஓரடி யெண்ணநேமி
வாதுபுரிந்திடாமல் வந்தருள் தாரும் நீ
மாசுளமதியும் மீசுரநதியும்
வீசிடும் ஒளியும் மேசிரமதனில்
மான்மழு அங்கையில் சேனையுமிங்கித
மேன்மையு தங்கிய வாய்மையும் நிறைந்த (பரம)

76 இராகம்-காபி. தாளம்-ஆதி.

பல்லவி.

அருளே தருவாய் பொருளே பெறவே
அருளே தருவாய் பொருளே பெறவே
மருவே மலரே குருவே துணையே புன் (அ)

அநுபல்லவி.

கரு முகில் போ லுள · சுருள் குற மா தினை
கன முடன் மனதினில் · உருகிய வே லனே
இரு ளினை சூழ் ந்திடும் · பெரு வன மேவியே
சிறு மியைக் கவர்ந் திடும் · சர வண பவனே யுன் (அ)

சரணம்.

பதஞ்சலி வியாக்கிரர் · பணிணவர் போற்றிடும்
பரமனு ரருளிய · திருவுருவே
துதிசெய்யும் சின்னசாமி · தொண்டனுக் கிதம் தரும்
தோகைமயில் வாகன · சாகசமே · நான்
துஞ்சியே அஞ்சலி · கெஞ்சியே தந்தனன்
விஞ்சையர் பஞ்சர · மஞ்சுக · சந்தனே
சூக்ஷி யுடன் பெரு · மாக்ஷி மையே யுன
தாக்ஷியை யெனக்கு · நீர் பூக்ஷி டலே கன
பகமே புகழே · திகழே சுகமே
இகமே மிகையே · எனையே வகியே
மய லதி னுல் வரும் · துயர் மிக வே படும்
இய வனு மா கிய · பயல் தனக் கே யுன்
சக மன தோ டுடன் · இகசு வையே கெடும்
சுக நிலை யே சொடும் · குக் முருகா உன் (அ)

77. வரைமகளே நீகெதி—என்ற வர்ன மெட்டு.

இராகம்-பைரவி. · தாளம்-ஆதி.

பல்லவி.

அனுதினமே பணிகுவேன் · உனை
யதி பிரி யமு டனே · இத மும் பெரு கிடவே
மதி நதி சடை யணி · கட் வுளு ன்சு தா (அனு)

அநுபல்லவி.

உணர்வில்லாப் பேதமையும் பிணவுபோல் பாதகனுய்
பிணியதால் வருந்தியே · தழலிடும் மெழுகுபோல்
உருகிக் கரைய மனம் · கருகி யடியான் வினை
சரிய யெனை யனுகா · கிரியை யடைந் திடவே
ஒளி யுடை வடி குக · னளி திரு மலர்ப் பதம்
மெவீங் திடுமடியனும் · கவி விவி கிட (அனு)

சரணம்.

ஓரிரண்டு நாளல்ல   உத்தமா யெந்தன் தொல்லை
தார்கொண்ட கதலிபோல் தாளமுடியவில்லை
வேருடன் அகற்றிடும்   வேளையெப்போது சொல்லேன்
சீருடன் துதித்திடும்   சின்னசாமியின் வள்ளால்
    சேரி யின் வீடதில் ஓரி போலு ளறியே
    சிறிய நோ யினால் கூரி யவே லனே
சிக்கல் மிக்கவாக   துக்கம் சொர்க்கமானேன்
சக்கர க்குகனே   பக்குவ த்துடனே
    சிறியேன் வறுமை அறியேன் தெரியேன்
    கிரிமா தெரிமா புரிவாய் அருளே
ஏது பிழை யிருப்பினி தொருபிழை பொறுப்பாய்
சதி யுட னுந்தனை துதித் திடு வேன் (அது)

78. விருத்தம்.

கனியாகி மதுபோலே சுவையாகி நிதிசாலை
    கண்மணி சுவாகா வினின்
கருவாகி உருவாகி திருவாகி அறிவாகி
    காரணப் பருவமாகி
இனிவாகி மறையோத கமலாசி யினதாவி
    இறைவனின் மேல் சினந்து
ஏற்குமோ உந்தனுக்கிச் செயல் வாய்க்குமோ
    என சிறை தான்கொடுத்து
மணியாகி புனசூழும் வனமேவி குறமாது
    வனிதையைத் தேர்ந்தெடுத்த
மாரனே அவுணர் படை வீரனே தீரனே
    மானிலம் புகழ் வேலனே
தனியாகி வினைமீறி துயராகி உனைக் கூறி
    தயங்கவும் உந்தன் செயலோ
தாசனும் சின்னசாமித் துதியும் ஷண்முகா
    தயவுடன் என்னை யருளே.

79. கற்பூர தீபாராதனையே—என்ற வர்ணமெட்டு.

இராகம்-மத்தியமாவதி. தாளம்-ஆதி.

பல்லவி.

கான லோல மகிபா கன
வினையதை நொடிதனில்
தவிர்த்தெனை யாண்டிடும்
மோன சீல குகனே (கான)

அநுபல்லவி.

ஈனமில்லாத தோடி இயல்புள்ள சாவேரி
கானடா செஞ்சுருட்டி காம்போதி பிலஹரி தனியாசி (கா)

சரணம்.

சங்கராபரணம் கல்யாண் சார்ந்திடும் பியாக் தேசிகம்
பொங்கு மத்யமாவதி புகழும் நாதநாமக்கிரி
மோகன பைரவி முகாரி சுருட்டியும்
ஆனந்த பைரவி ஆரபி காப்பியும்
சாகச கேதார கௌளகமாசும்
ஏகனே எதுகுலக் காம்போதியும் கவாப் (கான)
வீரவசந்தம் பரசு பூரி கல்யாணி தர்பார்
ஈரமுள்ள பூபாளம் ஏற்ற பந்து வராளி
கூறிமேனன் புன்னாகம் கும்ப காம்போதியும்
ஆரம சாவேரி அடாணா சாமளா
சாரமதைத் தரும் சஹானா பியானா
நாரதர்க்கிதந்தரும் நவரோஜ் டோமரி (கான)
தேசிக முகாரி குல்ரோஜ் திகழும் நாட்டைக் குறிஞ்சி
மாசிலா ஸ்ரீ கீர்வாணி மால்கோஷ் தில்லானா டப்பா
மகிழ்வுடன் தனதிடர் அகன்றிட வருந்தியே
வகையுடன் சின்னசாமி புகழும் பதியே
குகையினில் யான்படும் துயர் தனைத்தீர்த்திட
சுகமுள மயிலினில் வருகுவாய் நேர்த்தியாய் (கா)

80. இராகம்-இந்துஸ்தான் பியாக்கு. தாளம்-சாப்பு.

பல்லவி.

சன்னதி தெரிசனம் கிடைக்குமே உன்னைச்
சார்ந்தோர்கள் காரியம் நடக்குமே
சாமி நாத மகிபனே

சரண கமல பொற்பாதம் பணிகுவேன்
சண் முகனே குகனே—உந்தன் (சன்னதி)

அநுபல்லவி.

உன்னத சேவல் கொடியுடையாய்
நன்னயமான குணமுடையாய்
விண்ணுலகத்தோர்க் குறைமுடிய
வெருடனவுணரு யிர்மடிய—செய்த
வித்தே பரன் சித்தே மணிமுத்தே திகழ் அத்தே—யுனை
வேண்டினோர்க் கருள் தரும் உத்தமனே-உந்தன் (சன்)

சரணம்.

பாதகனான யான் ஓதுவது உந்தன்
சீதளமான செவிக் கேறலையோ
தீதுகள் செய்யநீர் சூது நினைத்தால்
ஏதென் றியம்புவேன் வாதனையே—உன்
பாதாரமே கெதி ஆதாரம் வேறில்லை
மேதகமேயுள்ள போதகமே
சுவை மோதகமே
உண்ணேன் சோதரனே என்
அந்தன் விலகிட உந்தன் சிந்தை மகிழம ருந்தே
வந்தருள் தரும கந்தா சொந்தமாயிவ் வேளை
சுந்தரனே சொன்ன
சொற் சோர்வுசெய்யாதே சந்தனமே பனம்
சோர்ந்து கிடக்கின்றேன் வய்பினியால் என்னை
சுகப்படுத்தாவிட்டால் தொந்தரையே குண
மைந்தன் சின்னசாமி செந்தமிழால் துதி
வந்தனம் கொள் திருச் செந்தூரனே உந்தன் (சன்)

81. மன மயிலமிட்டே—என்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் கவாய் பியாக்கு. தாளம்-ஆதி.

பல்லவி

குக நாமமே நினைகதிர் காமமேவினை
பறந் தேகிடும் வழியதைத் தேடும்.

அநுபல்லவி

சுக மோக்ஷமதைக் கொடுத்தாளும் மதி
தீக்ஷணியமதைக் காரும் ஆதி

ஆச்சரியமுடன் வீச்சுரமகிமையை
ஸ்தோத்திரம் செய்திட வாச்சல்யம் கொடும் வேல் ()

சரணம்.

குந்தனின் மகளிட கோனே உனைக்
கோறுவதும் அடி யோனே மிக
வந்தனை செய்வதும் வீணோ எனைத்
தொந்தரைசெய்குறுய் தேனே நீர்
லஜ்ஜையில்லாமலே இக்ஷணம்வருகுவாய்
பச்சைமேனியன் மருகோனே கொடு
நச்சரவம் மதி கெஜ்ஜையணிந்துமே
நடமிடுவன் மகிழ் வேசனே
இஷ்டன்சின்ன சாமி துதி
மெச்சம்தெண்ட பாணி பதி
இகபர நயகுண விகசித மதிசய
திடகுண மெனக்கருள் சுகமினி தருகும் வேல் (குக)

82 சுந்தரத்தைஎன்னசொல்லுவேன்என்றமெட்டு

இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

பல்லவி.

சந்திர பிம்ப ஷண்முகா சாமி வடிவேலா திரு
நளின மலர்ப் பொற் பாதம் தருக யிது சமயம் நாதனே
உந்தன் சிந்தை யிரங்கவில்லையா (சந்)

அநுபல்லவி.

சுந்திர வதன மாறு விந்தை பன்னிரு கரம் வேல்
தோகை மயில் வாகன மேறும் சாகசமே
சிந்தூரத் திலகம் நீறும் அந்தமுள நெற்றி சூழ
பந்தமுடன் குண்டலமிரண்டு செவி தனில் வீசிடும் (சந்)

சரணம்.

பக்தர்களைக் காத்திடும் பரம தயா நிதே
புத்தகம் போல் விளங்கும் வித்தகமே
சத்துருக்களை வேலால் சித்திர வதை செய்யும்
உத்தமா உன்னைச் சார்ந்தேன் சத்தியமே

ஓங்கும் பலவினையால் ஏங்கிப் பதைபதைத்து வாடிக் கரைந்துருகி
வேங்கை மரமாய்நின்ற நூங்கு உடைய உனை நாடித் துயர் பெருகி
உக்கிர முற்றிடும் சத்தியும் கைத்தல மாக தெரிசனத்தை
எப்பொழு துற்றிட வைத்திடு வீர்கன யோக மான பூஜிதா
சித்திரத்தே ருத்திரத்தி லெத்தனை விசித்திரத்தைக் கொண்ட வடிவழகா
கத்திரிபூண் ருத்திரனின் புத்திரனுகச் செனித்த தெண்டா யுத முருகா
கானின் வேனில்மிக தேனும் மாவுடனே சுவைக்க அருந்திட்டோனே
ஈனர் சேனைதனை வானின் சோனைபோல துவைத்து பொழிந்திட்டோனே

ஓரடி சின்னசாமி ஏரகத் துதிசெய்து
சாரமுடன் பணிந்து ஆரம்மணி கொண்டோனே
அரகர சிவயென ஒருதர முனைநினைந்
திடுவரின் பவமதைத் தொலைத்திடு மரசே
பலசிவ அரஎண . துதித்திடு மெனக்கருள்
புரிந்திட உனக்கினம் கடுமன தயவே
மூர்த்தியே சீர்த்தியே தீர்த்தனே கார்த்திட
சீ த ள மா ன (சந்தி)

83. விருத்தம்.

ஓராறு முகமுமாய் ஈராறு கரமும் வேல்
உத்தமா உனது முடியும்
உன்னதப் பார்வையும் சென்னியில் வீசிடும்
ஓங்குகுண்டல மிரண்டும்
நீரோடும் புஷ்பராகம் பச்சை கெம்புகள்
நீலமும் வைத்திழைத்த
நேர்கதிர்க் கூசிடவும் பார்தனில்ப் பூசிட்வும்
நினது புகழும் கிரீடமும்
தாரா கடப்பமணி வெண்ணீறு பூசியே
தாங்கிடும் ருத்திரமாலை

தரித்திடும் மார்பனே ஷண்முகா வேலனே
சஞ்சலம்மான எந்தன்
தீராத வினைகளும் ஆராத துயர்களும்
தீர்த்து ரக்ஷித்தருளுவாய்
சிறியனும் துதிசெய்யும் சின்னசாமிக் கவியை
சீருடன் புகழும் பதியே,

84. இராகம்-கல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

சூரசம்ஹார கெம்பீரா அதி
சுரர்களின் துதிக்கருள் புரிந்திடும் வரகுண
சோம சேகரனின் பாலா வேலா மத (சூர)

அநுபல்லவி.

ஆரகடகமே பூரகங்கண வளை
கூரம் புனைந்த கொடு சிறிய வேலுடன்
ஈராறு கரத்தினி லின்பமாய் வீசிடும்
ஆறுமுகத்துட னமர்ந்திடும் ரண தீர (சூர)

சரணம்

அனித்திய உடலொடு ஜெனித்ததில் பலனென்ன
துணித்திடும் மோகமதைக் கனித்திடும் நோயதை
ஆல காலமுண்ட பால நீலகண்டர்க்
கேல நூலைத்துண்ட மாக ஓதிச்சென்ற
அறுமுக பரங்கிரி சிவகுக முருகனே
குருமுனிக் கருள்தனைப் பொழிந்திடும் சரவண
அத்தா நித்தமுனை ஸ்ரத்தா பக்தியுடன்
பித்தா கைத்தொழுதேன் வைத்தா ளித்தினமே
ஆண்டிடு வதிலுன் தேர்ந்திடும் கருணை
கூர்ந்திட மனது வாய்ந்திடும் கனியே
குமரன் சின்னசாமி புகழும் தெண்டபாணி
கோது ஏதென் மீது வாது தீது செய்திடலாகாது
குருவே பதியே துணை மருவே யுனையும் விட்
டெதியும் ஒருவ ரிலை திருவே அருள்புரி வாய்
குவலய முழுதையும் சிதறிடச் செய்தகி
பவமதைக் கவர்ந்திடும் பாதகராகிய (சூர)

நாமாவளி கீர்த்தனைகள்.

85 விடமு சாயவே—என்ற வர்னமெட்டு.

பல்லவி.

மயிலேறியேவா உந்தன் வரமே தருவாயே நீ (மயி)

அநுபல்லவி.

வயல்சூழ் பழனி புரிவாழ் பதியே
செயலோ வினையோ யெனையணுகாதிட (மயி)

சரணம்.

பக்தியுடனே தொழுதே னுனையே
முத்தி தருவாய் முழுமனதுடனே
இத்ததியெனை இகழ்ந்திடாமல்
நத்திடு மெனைநீர் சத்தியும் வேலுடன் (மயி)

86. கனக சபாபதி—என்ற வர்ன மெட்டு.

இராகம்-தந்நியாசி. தாளம்-ஆதி.

பல்லவி.

சரவணபவ சிவ முருகனைப் பஜித்திட
சகல சித்தியுமாமே (சர)

அநுபல்லவி.

சுரர்களும் வருந்திட துயர்தனை விலகிட
உரமுள சூரரை நமனுல கேற்றிய (சரவ)

சரணம்.

காலையும் மாலையும் சீலமதாகவே
வேலனைத் துதித்திட வேபிணியகலுமே
நாளைவரும் யெமனை நாடியணுகிடாமல்
கோலமாமயிலேறி கொடுத்திடும் கதியதை (சரவ)

87. இராகம்-தேசிக தோடி. தாளம்-ஆதி.

பல்லவி

ஆனந்தமே துதித் தால்நெஞ்சமே (ஆன)

அநுபல்லவி

ஞானமும் கல்வியும் மோனமும் தருமே
கானமயிலேறும் காருண்யனை பூஜித்தால் நமக் ()

சரணம்.

புத்தியும் சித்தியும் வெற்றியுண்டாக்கும்
பூர்வஜென்ம சாப பாபங்கள் போக்கும்
நற்கெதி கூடும் நாடும் பிணிகள் ஓடும்
பக்தியுடன் வேலனை பாலனை பூஜித்தால் நமக் (கான)

88. கரவடியா லேனதே—என்ற வர்ண மெட்டு.

இராகம்-தேசிக தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

முருகையா வாரு மையா

அநுபல்லவி.

வருக வருக கிருபை புரிகுவீரென நினைந்
துருகி வாடினேனே சரவண குக (முரு)

சரணம்.

அஞ்ஞான இருளை மெஞ்ஞான ஒளியால்
ஆனந்தத்தேனே அகற்றிடுவாய்
தூய்மனத்தோனேயென் தொல்வினை போக்கிட
பாய்மரம் போல் நீரும் பரகதி தர (முரு)

89. வேணுகானம் செய்தாரே—என்ற மெட்டு.

இராகம்-மோகனம். தாளம்-ஆதி.

பல்லவி.

தெண்டாயுதா வேல் முருகா ஜெகம் புகழ்ந்திடும் பர சிவக்
கொழுந்தேயுனைக் கொண்டாடினேன் அருளாய்

அநுபல்லவி.

விண்டேன் பந்த பாசத்தைக் கொண்டே னுந்தன் நேசத்தை
கண்டே கனிரசமே பண்டே பழனிபுரிப் பதியருள் (தெண்)

சரணம்.

சோமவார விரதம் துதித்துத் தவமிருந்தால்
காம லோப மதமும் கதிரொளி பனியாகும்
சாம பேத தான தண்ட சதுருபாயங்கள் தரும்
சோம சேகரனருள் சூலனே பாலனே வேலனே யெனையருள்

90. இராகம்-மத்தியமாவதி. தாளம்-ஆதி.

பல்லவி.

கார்த்திகேயர்க் குமரைய்யர் பன்னிரு கையா
சீர்த்தி மிகுந்திடும் மெய்யா (கார்)

அநுபல்லவி.

பூத்த மலரிணமே புகழுவீசும் மணமே
கோத்தநற் பவளமே குஞ்சரமே துதிசுரர்களின் திலகமே ()

சரணம்.

சாத்திரமான இந்த கடையுடம் பெடுத்து நான்
சூத்திரப்பாவைபோல் சூதில் மயங்கியானும்
தோத்திரம் செய்துன்னை தொழுதழு தேற்றினேன்
சூக்ஷுமதேகத்தை காக்ஷியுடன் கொடுத்தருளிடு
வாயேனை. (கார்)

91 ஞானசுந்தரவடிவேலனே என்ற மெட்டு.

இராகம்-தேசிக் தோடி. தாளம் ஆதி.

பல்லவி.

மோனகந்தகிரிநாதனே நீதனே

அநுபல்லவி.

பானு ஒளி வீசிட புக்லமதி கூசும்போல்
வானவர்க்கதிரோனுய் வழங்கிடும் வேல் (மோ)

சரணம்.

கடலொலி போலுந்தன் கருணையினைச் சிலங்கும்
சுடரொளிதீபம்போல் ஜொலித்திடுதே
மடமையையகற்றியே மன ஒளி புகட்டியே
மாமயிலேறி மையல் அறுத்திடுவாய் (மோ)

92 நாரே நாரக்கர் என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

வேல்முருகா மால்மருகா என் (வேல்)

அநுபல்லவி.

சூழ்வினையகற்றியுன காக்ஷியுடனருள்வாய் (வேல்)

சரணம்.

சாரமில்லாத என் ஜானுடம் பெடுத்து நான்
கோரமான செயல் செய்திடவோ
வீரனே ஆகம விதி தன்னை நிகழ்த்திட
சூரசம்ஹாராயெனை சூக்ஷியுடனருள்வாய் (வேல்)

93 தேவா தேவா என்ற வர்ன மெட்டு.

பல்லவி.

ஏனோ வாது ஏழையின் மீது
ஏற்குமோ உந்தனுக்கீது தகாது (ஏனோ)

அநுபல்லவி.

வானோர் புகழும் வடிவேலோனே
வாழ்நாள் முழுவதும் வழக்கிடலாகுமோ (ஏனோ)

சரணம்.

எத்தனை நாளாய் நத்திடும் துயரால்
சித்தம் கலங்கியே மெத்த வருந்திட
உத்தமா உன்மனம் ஒப்பிடலாகுமோ
பக்தர்கள் போற்றிடும் பாலாயெனைக்காத்திடும் ()

94. கருணாநிதே—என்ற வர்ன மெட்டு.

பல்லவி.

வரமருளே பரமபுருஷனே (வர)

அநுபல்லவி.

சரவணபவ ஷண்முகனே நீரும் (வர)

சரணம்.

கண்ணே மணியே பசும்பொன்னே புகழே சுடர்
மின்னே ஒளியே குயில் அன்னமே கிளியே
மன்னே நவமணியே மாணிக்கமே யெந்தன்
இன்னலைத் தீர்த்தெனை எப்பிறவியுமிலா (வர)

95 மங்களம்.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

சுப மங்களம் சிவசுப்பிரமண்யா

அநுபல்லவி.

வாசியி லேறிடும் தேசிகனே யெழில்
வளர்துர கதஜெய வடிவேலனே சுப (மங்)

சரணம்.

இங்கிதமுடனே எங்கினுமுனையே
ஏற்றித் துதித்திடுவர் போற்றிப் பஜித்திடுவர்
கேட்டு மகிழ்ந்திடுவர் பார்த்துப் புகழ்ந்திடுவர்
இதமாய் எழுத்தினோர் பதமாய்த் திருத்தினோர்
சுகமாய்ப் பதித்துளோர் இனிதாய்ப் படித்துளோர்க்
கெழிலாய் ஒயிலாய் மகவே பொருளே
பெறவே வரமே தருவாய் குகனே
ஏற்றமுடனே மன வாட்டமில்லாமல் குண
இன்பன் சின்னசாமி செந்தமிழால் துதி (மங்)

ஸ்ரீ சிவ சுப்ரமண்யர் பக்திரச அலங்காரக் கீர்த்தனைகள்.

முதற்பாகம் முற்றுப்பெற்றது.

OB26417
N24

வாழி விருத்தம்.

ருத்ரோத்காரிச் சிங்கம் தோன்றிய திங்கள் நான்கில்
சித்திர முருகன்கீதம் சிவராம விலாஸ் பிரசில்
சொற்சுர பாடல்தன்னை துலங்கிட திருத்தம்செய்து
பக்தியாய் உதயமாகக் பனுவலர்ப் பெரியோர் சிறியோர்
சித்தமதனையும்வைத்துத் தீதென இகழ்ந்திடாமல்
உத்தமமாகப்பூசித் தோங்கியே துதித்தபேர்க்கு
புத்திரப்பேறும் கீர்த்திப் பொருள்தரும் பிணியுமின்றி
வைத்தருள் செய்வார் கௌரி மைந்தனும் வாழி வாழி.

183369

உ

சரஸ்பதி துணை.

'சிவராம விலாஸ் பிரஸ்'

ஈரோடு.

எங்கள் அச்சுயந்திரசாலையில் தமிழ், இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் புக் பாரங்கள், ஜாப் வேலைகள் எவ்விதமாயினும் அவரவர் இஷ்டம்போல் குறித்த காலத்திலும், குறைந்த சார்ஜிலும் அச்சடித்துக் கொடுப்பதுடன் நயமான பயிண்டு முதலிய வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

E. K. சிவராம முதலியார்,
புரொப்ரைட்டர்.

இப்புஸ்தகம் கிடைக்குமிடங்கள்:—

சிவராம விலாஸ் பிரஸ், ஈரோடு.

P. M. முனிசாமி கண்டர்,
கருங்கல்பாளையம், ஈரோடு.

குறிப்பு:—கமிஷன் ஏஜண்டுகள் தேவை, தக்க கமிஷன் கொடுக்கப்படும். கமிஷன் விபரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

P. M. முனிசாமி கண்டர்
கருங்கல்பாளையம், ஈரோடு.